# வளம்

## வணிக மாணவர் சஞ்சிகை

தரு 1 ஏப்ரல் - செப்ரெம்பர் '94 கிளை 2

- ★ நாணயக் கொள்கையும் மத்திய வங்கியும்
- ★ உற்பத்தியின் வகைகள்
- ★ குத்தகை
- ★ இருப்புத் தொழிற்பாட்டுக் கணக்கீடு
- ★ விகிதப் பகுப்பாய்வு
- ★ பெருந்தோட்டத் துறையின் முகாமைத்துவ மாற்றம் பற்றிய ஒரு நோக்கு
- ★ தற்சமனாக்கும் முறை
- ★ பொதுத்துறை நிறுவனங்களின் தனியார் மயப்படுத்தல்
- ★ இலங்கையில் வங்கித்தொழிலின் வளர்ச்சிப் போக்கு

COMMERCE RESOURCE CENTRE - JAFFNA.
வணிக வள நிலையம் - யாழ்ப்பாணம்

யாழ். மாவட்ட வணிக
வள நிலையம்

கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்

R. Shanthralha
Ramanathan College

# பாடசாலை அனுபவம்

தொடர்ச்சியான பாடசாலைக்கல்வி, கற்கும் பாடங்கள் தொடர்பான அறிவுசார் அனுபவத்தை வழங்குகின்றது. பாடசாலைக் கல்வியை எமது சமூகம் பரீட்சையில் உயர் அடைவினைப் பெறுவதற்கு ஒரு ஊடகமாக எண்ணுவது விசனத்திற்கு உரியதொன்றாகும்.

க.பொ.த (உ/த) பரீட்சையைத் தவிர்ந்த ஏனைய பரீட்சைகள் தகுதிச் சான்றிதழை வழங்கும் நோக்கத்தைக் கொண்டது என்பது உண்மையாகும்.

எனவே மாணவர்கள் பாடசாலையில் கற்கும் போது நூல்சார் அறிவைப் பெறுவதுடன் சகபாடிகளுடன் உறவாடும் அனுபவம், அதன் மூலம் கல்வியில் ஊக்கம் பெறும் நிலை, சமூகத்தில் தாம் முகம் கொடுக்கப் போகும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அனுபவம் குழுவாகச் செயற்படும் அனுபவம் இணைந்த கலைத் திட்டச் செயற்பாடுகளில் ஈடுபடும் அனுபவம் என்பவற்றை பெறமுடியும் என்பது உண்மையாகும்.

— சஞ்சிகைக் குழு —

## கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம் வலயம் 2

### வலயமட்டத்தில் நடைபெற்ற

# வணிகப் போட்டிகள் முடிவுகள்

## (17-09-94)

### ஆண்டு 9 வினாடி வினாப் போட்டி

1ம் இடம் தே. சாமிகா யா/குடத்தனை அ. த. க. பாடசாலை
2ம் இடம் சி. பிரபாகரன் யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி
3ம் இடம் நா. சுச்சலா யா/வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர்
4ம் இடம் வ. தர்மினி யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாட
4ம் இடம் வரப்பிரகாசம் செல்ரன் லோகராஜ்பிரகாஷ்
சண்டிலிப்பாய்

### ஆண்டு 11 கட்புலசாதன ஆக்கப்போட்டி

1ம் இடம் த. சேவினி யா/கோப்பாய் மகா வித்தியாலயம்
2ம் இடம் இ. நிமலரஞ்சன் யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி
3ம் இடம் ச. சுமித்ரா யா/மகாஜனக் கல்லூரி
4ம் இடம் ச. கோபிநாத் யா/மகாஜனக் கல்லூரி
5ம் இடம் ச. ஜெயச்சந்திரதாசன் யா/வல்வை சிவகுரு
வித்தியாலயம்

### ஆண்டு 10 வணிகப்பேச்சுப் போட்டி

1ம் இடம் சி. தயாபரன் யா/மல்லாகம் மகா வித்தியாலயம்
2ம் இடம் வி. சுரேஷ் யா/[illegible] கல்லூரி
3ம் இடம் இ. நிருஷா யா/உடுவில் மகளிர் கல்லூரி
4ம் இடம் இ. விமலன் யா/ஹாட்லிக் கல்லூரி
5ம் இடம் ச. பிலிப்ரஞ்சன்குமார் யா/புனித ஹென்றிஸ் கல்லூரி

### க. பொ. த உயர்தர வணிக கட்டுரைப் போட்டி

இடம் சி. முகுந்தன் யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி
இடம் ந. தர்சினி யா/சிதம்பராக் கல்லூரி
இடம் சி. சிவாஜினி யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி
இடம் ஜ. ஜயந்தா யா/சிதம்பராக் கல்லூரி
இடம் சு. சிவரூபி யா/மல்லாகம் மகா வித்தியாலயம்

# நாணயக் கொள்கையும் மத்திய வங்கியும்

நா. வரதராசா
திட்டமிடல் அலுவலர்
கல்வித்திணைக்களம்
யாழ்வலயம் 2,

எல்லா நாடுகளிலும் ''பணம்'' பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பயன்படுத்தப்படுவதனால் அரசினது செயற்பாடுகளை அடைய வேண்டிய இலக்குகளுக்கு இட்டுச்செல்வதற்கு அது ஒரு செயற்படுகருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு நாட்டில் புழக்கத்திலுள்ள பண அலகின் பெறுமதியினை ஸ்திரநிலையில் பேணுவதுடன் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதையும் அடிப்படைநோக்கங்களாகக் கொண்டு தேசியநாணயக் கொள்கை வகுக்கப்படுகின்றது. இந்நாணயக் கொள்கையை உருவாக்குவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் இலங்கையில் 'நாணயச்சபை பணியாற்றுகின்றது.

இலங்கை நாணயச்சபையின் செயற்பாடுகள் நாணயச் சட்டத்திற்கு (MONETARY ACT) அமைவாக உள்ளது நாணயச்சபையின் மேற்பார்வையில் ''இலங்கை மத்தியவங்கி' தொழிற்படுகின்றது. இலங்கை மத்திய வங்கிநாணயச் சட்டத்தில் கூறப்பட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது. வங்கித் தொழில், கடன்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், புழக்கத்திற்கான பணவெளியீடு, அரசினதும் வர்த்தக வங்கிகளினதும் வங்கியாகத் தொழிற்படுதல் ஆகியவை முக்கிய தொழிற்பாடுகள் ஆகும்

ஒரு நாட்டின் தேசிய நாணயத்தின் ஸ்திரநிலையினை பல காரணிகள் பாதிக்கின்றன. பொருளாதார நடவடிக்கைகளின் அளவிற்கு மிகையாக உள்ள பணநிரம்பல் அல்லது சராசரி விலைமட்டத்தில் ஏற்படும் அதிகளவு ஏற்றம், இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதிக்கு அச்சுறுத்தலாக அமையும். சர்வதேச ஒதுக்கில் (வெளிநாட்டு ஒதுக்கு) ஏற்படும் வீழ்ச்சி போன்றவை அமைகின்றன. எனவே நாணயக் கொள்கையானது மேற்கூறிய பாதக நிலைக்குப் பரிகாரம் தேடக்கூடிய அம்சங்களை உள்ளடக்கியதாக உருவாக்கப்படுகின்றது.

நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு நாணயச் சட்டத்தின் மூலம் மத்திய வங்கிக்குப் போதியளவு விரிவான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நிலமைக்கு ஏற்ப பொருத்தமான நாணயக் கட்டுப்பாட்டு முறைகளைத் தெரிவு செய்து நடைமுறைப்படுத்துவதற்கு வங்கிக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது.

நாணயக் கொள்கையை மத்தியவங்கி நிருவகிக்கும் போது அரசின் நோக்கங்கள், இலக்குகளுடன் ஒத்திசைவுடன் செயற்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் நாணயக் கொள்கையுடன் பொருந்தக்கூடிய கட்டுட்ப்பாட்டு முறைகள் முதலில் நாணயச் சபையினால் பரிசீலிக்கப்பட்டு அவை அரசுக்கு அறிவிக்கப்பட்டு பின்னர் நடைமுறைப்படுத்தப்படும். பணநிரம்பல் வெளிநாட்டுச் சொத்துகள் விலைமட்டம் சென்மதி நிலுவைதொடர்பான விடயங்கள் காலதிற்குகாலம் நாணயச்சபையினால் பரிசீலிக்கப்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு பண விரிவு அவசியமான நிலையாகும். ஆனால் பொருளாதாரரீதியில் முக்கியத்துவமான துறைகளுக்கு மட்டும் பணவிரிவின் தாக்கம் சென்றடையாது விடுமாயின் அது நாட்டின் நாணயப் பெறுமதியில் பாதகமான தளம்பல் நிலையை ஏற்படுத்தும் எனவே மத்திய வங்கி இத்துறைகளின் தேவைகளுக்காக பண விரிவு ஏற்படுவதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. அத்துடன் விருப்பத்தகாத அளவிற்கு பணவிரிவு ஏற்படுமாயின் அதனால் விகாரமான பணவீக்கநிலை ஏற்படுவதுடன் சென்மதி நிலுவை பாதகநிலைக்குச் செல்வதைக் கட்டுப்படுத்த முடியாமல் போய் விடுகின்றது.இதனால் இலங்கை ரூபாவின் உள்நாட்டு வெளிநாட்டு பெறுமதியில் வீழ்ச்சி ஏற்படும், எனவே மத்திய வங்கியானது அதிகளவு பணவிரிவினால் தேசிய பொருளாதாரத்தில் ஏற்படும் மிகையான திரவநிலையை நீக்குவதற்கும், ரூபாவின்

பெறுமதியில் வீழ்ச்சி ஏற்படாமல் தடுப்பதற்கும் உரிய நட வடிக்கைகள் எடுக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளது.

நாட்டின் பணநிரம்பலில் சட்டமுறை நாணயத்திலும் பார்க்க அதிகளவு பங்கினை வங்கிப்பணம் வகிக்கின்றது. வங் கிப்பணமானது வர்த்தக வங்கிகளின் கடனாக்க நடவடிக்கை மூலம் உருவாக்கப்படுகின்றது. எனவே பணநிரம்பலைக் கட்டுப் படுத்துவதற்கு வர்த்தக வங்கிகளின் கடனாக்கம் செய்யும் ஆற்ற லைக் கட்டுப்கபடுத்தல் அவசியமாகும். இதற்கென விரிவான கருவிகள்மத்தியவங்கியிடம் உள்ளது.

மத்திய வங்கியினால் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப் படும் கடன்கள், முற்பணங்கள் தொடர்பான கட்டுப்பாடு அதில் முக்கியமானவையாகும். பணநிரம்பலின் மிகையான விரிவு காணப்படும் போது வர்த்தக வங்கிகளின் கடன் வழங் கும் நடவடிக்கைகளைக் குறைக்க வர்த்தக வங்கிகளுக்குக் வழங் கப்படும் கடன் வசதிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வும் மத்திய வங்கியினால் இயலும்.

வழங்கப்படும் கடனின் அளவு, அது சென்றடையும் திசை ஆகிய இரண்டும் நாணயக் கொள்கையுடன் தொடர் புடையன கடன அளவின் மீது மத்திய வங்கியினால் மேற் கொள்ளப்படும் கட்டுப்பாடு கணிய / தொகை அளவான (மர புக்கட்டுப்பாடு) எனவும் பணம் செல்லும் திசை தொடர்பான கட்டுப்பாடு வகை அளவான கட்டுப்பாடு (தெரிவுக்கட்டுப்பாடு) எனவும் அழைக்கப்படும்.

## தொகை அளவான கடன் கட்டுப்பாடு:
## (மரபுக்கட்டுப்பாடு]

தொகை அளவான கட்டுப்பாட்டு முறையில் வர்த்தக வங்கிகளுக்கு 'கடனை வழங்கும் போது அறவிடப்படும் வட்டியில் மாற்றத்தைக் கொண்டு வருவதன் மூலம் கட னின் அளவில் தாக்கம் ஏற்படுத்தப்படுகின்றது. இங்கு கடன் வழங்குவதன் நோக்கம் பற்றிக் கருத்திற் கொள்ளப்படுதில்லை

இக்கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொள்ள மத்திய வங்கி; வங்கிவீதம் (நியதிச்சட்ட) ஒதுக்குவீதம்; திறந்த சந்தை நடவடிக்கை ஆகிய கருவிகளைப் பயன்படத்துகின்றது.

i) வங்கி வீதம்

நாணயச் சட்டத்தின் 87ம் பிரிவில் வங்கி வீதம் தொடர்பான விடயங்கள் கூறப்பட்டுள்ளன. கழிவு வீதம் எனவும் அழைக்கப்படும் விகிதம் மத்தியவங்கியினால் வர்த்தக வங்கிகளுக்குக் கடன் வழங்கும்போது அறவிடும் வட்டிவீதமாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இக் கருவியின் வினைத்திறன் வரையறுக்கப்பட்டதாக இருப்பினும் பொருளாதாரத்தின் வட்டி வீதத்தின் போக்கினைக் காட்டும் ஒரு சைகையாக அமைந்துள்ளது.

மத்திய வங்கியின் வங்கி வீதத்துடன், மீள்நிதியிடல் அடிப்படையிலான கடன் வழங்கும் திட்டம் தொடர்பான வட்டி வீதம் ஆகியவை வட்டி அமைப்பில் ஏற்படும் தாக்கத்தினையும் கருத்திற் கொள்ள வேண்டும். 87ம் பிரிவின்படி ஒவ்வொரு கடன் வழங்கலின் வடிவத்தையும் அது தொடர்பான நிபந்தனைகளுக்கு அமைவாக அறவிட வேண்டிய வட்டி வீதம், கழிவு வீதம் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் அதிகாரம் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் வங்கி வீதத்தில் ஏற்படும் மாற்றமானது பொருளாதாரத்தில் வட்டி வீத அமைப்பிலும் முதலீடு, கடன் வழங்கும் செயற்பாடுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு பிரதான காரணமாக அமைவது கடன்படுவோருக்கு ஏற்படும் கிரயம் (COST) அதிகரிப்பதாகும். மத்திய வங்கியின் வட்டிவீதம் உயர்வதனால் வர்த்தக வங்கிகள் தமக்கு அவசியம் தேவைப்படும் நிதியைப் பெறுவதற்கான கிரயம் அதிகரிக்கின்றது. இதன் சுமையை தமது வாடிக்கையாளருக்கு கைமாற்றுவதனால் வழங்கும் கடன்களுக்கான வட்டி வீதம் உயர்வடையும். இதனால் தனியார் துறையில் கடனுக்கான கேள்வி குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்தியவங்கி வட்டி வீதம் என்பதன் கீழ் தண்டணை வட்டி வீதத்தையும் செயற்படுத்தும் இவ்வட்டி வீதம் 20 — 30 வரையில் அமையும். தொடக்ககாலங்களில் வங்கி வீதம் ½ ஆக இருந்து தற்போது 17 % வரை அதிகரித்துள்ளது.

ii) ஒதுக்கு வீதம் [நியதிச்சட்ட)

வர்த்தக வங்கிகள் தம்மிடமுள்ள பல வகைப்பட்ட வைப்புக்களுக்கு மத்திய வங்கியில் ஒதுக்கினைப் பேண வேண்டி

யதாக உள்ளது. இவற்றைத் தவிர சில தெரிவு செய்யப்பட்ட வைப்புக்களுக்கும் (இறக்குமதி தொடர்பான இழிவு அளவு வைப்பு) ஒதுக்கினைப் பேணும்படி கேட்கலாம்' மேலும் குறித்த ஒரு திகதியிலிருந்து அதிகரிக்கும் வைப்புகளுக்கு மேலதிகமாக ஒதுக்கினைப் பேணும்படி கேட்கவும், பயன்படுத்தப்படாத வங்கி மேலதிகப் பற்றுக்கு ஒதுக்குவீதத்திளை தீர்மானிக்கவும் மத்தியவங்கிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. நாணயச் சட்டத்தின் 93ம் பிரிவின்படி வர்த்தகவங்கிகளின் ரூபாப்பெறுமதிகளிலுள்ள பொறுப்புகளுக்கு ஒதுக்கு நடவடிக்கையை மேற்கொள்ள மத்தியவங்கிக்கு அதிகாரம் உண்டு. 94ம் பிரிவின்படி மத்தியவங்கி வெவ்வேறுவகையான வைப்புகளுக்கு வித்தியாசமான ஒதுக்குவீதத்தை நடைமுறைப்படுத்தும்.

கேள்வி வைப்புக்களுக்கும் பயன்படுத்தாத மேலதிகப் பற்று வசதிக்கும் 10—40% வரையிலான ஒதுக்கு வீதத்தைக் காலத்திற்குக் காலம் பேணலாம். சேமிப்பு தவணை வைப்புகளுக்கு 5 – 20% வரையிலான ஒதுக்கு வீதத்தை நடைமுறைப்படுத்தலாம்.

ஒதுக்குவீதத்தை செயற்படுத்தும்போது படிப்படியாக அறிமுகப்படுத்தப்படுவதுடன் 30நாள் இடைவெளியில் அதிகரிப்பு வீதம் 4%ற்கு மேற்படக்கூடாது. ஒதுக்கு வீதத்தை உயர்த்தத் தீர்மானிப்பின் அது நடைமுறைப்படுத்தப்படும். திகதிக்குப் 14 நாட்களுக்குமுன் வர்த்தகவங்கிகளுக்கு அறிவிக்க வேண்டும். எனினும் அதிபணவீக்கம் நிலவு காலங்களில் ஒதுக்கு வீததிளை 100% ஆகவும் பேணலாம். ஒதுக்கு வீதத்தின் உயர் எல்லையைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை நாணயச்சபை கொண்டுள்ளது.

ஒதுக்கு வீதத்தினை அதிகரிக்கும்போது வர்த்தகவங்கிகளின் கடன் வழங்கும் ஆற்றல் குறைக்கப்படுகின்றது. இவ்வீதம் வங்கிக் கடன்களை கட்டுப்படுத்துவதுடன் வைப்பாளர்களின் பணத்திற்கு காப்பு வழங்கும் நடவடிக்கையாகவும் அமைகின்றது.

மரபுரீதியான கடன் கட்டுப்பாடு முறைகளுடன் ஒதுக்கு வீதம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படுகின்றது இது பெருமளவில் உருவாகக் கூடிய வங்கிக் கடனாக்கத்தினைத் தடுப்பதற்கான சுலபமான கருவியாக அமைகின்றது.

## iii) பகிரங்கச் சந்தை திறந்தசந்தை நடவடிக்கை

பகிரங்கச் சந்தை நடவடிக்கை லங்கித் தொழிலில்
காணப்படும் திரவத் தன்மையினை அதிகரிப்பதற்கும் குறைப்பத
ற்கும் மத்தியவங்கி குறுந்தவணை, நடுத்தவணை, நீண்டதவ
ணைக்காலமுடைய உண்டியல்களையும் பிணையங்களையும்
விற்பனை செய்வதும் மீளக் கொள்வனவு செய்வதைக்
குறிக்கும்.

அரச பிணையங்கள், திறைசேரி உண்டியல்கள் தல்
நிலை, துணைநிலை) மத்தியவங்கியின் பிணையங்கள், பொன்
அந்நியச்செலவாணி ஆகியவை பகிரங்கச் சந்தையில் ஈடுபடுத்தப்
படும் கருவிகளாகும்.

பகிரங்கச் சந்தை நடைவடிக்கையானது நிலைமைக்கு
ஏற்ப நெகிழ்ச்சியுடையதாகவும் திரவத்தன்மையின் அளவினை
தீர்மானிக்கக் கூடியதாகவும் கடனுக்கான கிரயத்தின் மீது செல்
வாக்குச் செலுத்தக் கூடியதாகவும் நாள்தோறும் நடைமுறைப்
படுத்தப்படுகின்றது. இந்நடவடிக்கையானது வர்த்தக வங்கி
களின் வங்கிகளின் ஒதுக்கின அளவின் மீது தாக்கத்தை ஏற்
டுத்தி அதன் விளைவாக வங்கிகளின் கடனாக்கத்தின் மீது
மறைமுகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

உண்டியல்களையும், பிணையங்களையும் பொது மக்
ளும் நிறுவனங்களும் வாங்க முற்படும்போது வைப்புக்களின்
அளவு குறைக்கப்படுவதனால் வங்கிகளின் கடனாக்கச் சக்தி
குறைவடையும். மத்தியவங்கி பிணையங்களை மீட்கும்போது
பொருளாதாரத்தில் பணஅளவு கூடுவதனால் வைப்புக்கள் அதி
கரித்துகடனாக்கச் சக்தியும் அதிகரிக்கும்.

பகிரங்கச் சந்தை நடவடிக்கைய வெற்றிகரமாக
செயற்படுவதற்கு வளர்ச்சியடைந்த நிதிச்சந்தை ஒரு நாட்டில்
இருத்தல் வேண்டும். இலங்கையில் திறைசேரி உண்டியலின்
பெரும்பகுதி மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்படு
கின்றது. அதேபோன்று அரச பிணையங்களிலும் ஊழியசேம
லாப நிதியம் காப்புறுதிக்கூட்டுத்தாபனம் போன்ற ஒருசிலநிறு
வனங்களே முதலீடு செய்கின்றன. மத்தியவங்கி பொருளாதாரத்
தில் பணத்தின் அதிதிரவநிலை காணப்படும்போது தனது
பிணையங்களை விற்பனைசெய்து நிலவும் விரும்பத்தகாத பண
வீக்க நிலையை கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் கொண்டுள்ளது.

## வகைப்படுத்தலான கட்டுப்பாடு (தெரிவுக் கட்டுப்பாடு)

இக் கட்டுப்பாட்டு முறையானது கடனின் அளவு அதற்கான கிரயம் ஆகியவற்றின்மீது கட்டுப்படுத்தாது தேசியஅபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டதும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய துறைகளை இனங்கண்டு அத்திசையை நோக்கி கடன் வழங்குவதை ஊக்குவிப்பதாக அமைகின்றது. முன்னுரிமை வழங்கப்பட்ட துறைகளுக்கு நியாயமான கிரயத்தில் (வட்டியில்) கடன் வழங்குவதை உறுதிப்படுத்துவதுடன் அவையல்லாத துறைகளுக்கு இவ்வாறான கடன்கள் வழங்கப்படுவதைத் தடுப்பதும் ஆகும்.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மரபுக் கட்டுப்பாட்டுமுறை முழுமையாக வெற்றி அளிக்காமையினால் முன்னுரிமை வழங்கப்படவேண்டிய துறைகளுக்கு இம்முறைமைமூலம் பயன் கிடைப்பதில்லை எனவே மத்தியவங்கியானது மரபுக்கட்டுப்பாட்டு முறைகளுடன் தெரிவுக் கட்டுப்பாட்டுமுறையும் ஒன்றாகச் செயற்படுத்த வேண்டியுள்ளது இலங்கை மத்திய வங்கி, கடன் வரம்பு விதித்தல், கடன் திட்டமிடல், வங்கிகளுக்கு வேண்டுதல் விடுத்தல், வர்த்தக வங்கிகளுக்கு வழங்கும் ஆலோசனைகள் சுற்றறிக்கைகள் ஆகிய கருவிகளை தெரிவுக்கட்டுப்பாட்டுமுறையில் பயன்படுத்துகின்றது.

நாணயச் சட்டத்தில் vii அதிகாரத்தில் 100ம் பிரிவின்படி வர்த்தக வங்கிகள் பல்வேறு வகையான கடன்களை வழங்கும்போது பெறவேண்டிய பிணைகளைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் முதலீடு / கடன்வழங்கும் காலப்பகுதி ஆகியவற்றைத் தீர்மானிக்கும் அதிகாரத்தையும் மத்திவயங்கி பெற்றுள்ளது. அவசியமற்ற கடன்களை வழங்கும்போது திருப்பிச் செல்லுத்தும் காலத்தைக் குறைப்பதன்மூலமும் அவசியமற்ற கடன் வழங்கும் அளவினைக் குறைக்கலாம்.

வர்த்தக வங்கிகள் கடன் வழங்கும் எல்லையை நிர்ணயிப்பதும் தெரிவுக் கட்டுப்பாட்டு முறையாகும். இது பொதுவாக பணவீக்கநிலை இருக்கும்போது மட்டுமே செயற்படுத்த வேண்டும். 1984ல் ஏற்படுத்தப்பட்டுள்ள பொதுகடன் வரம்பு தொடர்ந்து செயற்படுத்தப்படுகின்றது எனினும் இவ்வரம்புக்குள் ஏற்றுமதி விவசாயம் தொடர்பாக வழங்கப்படும் கடன்கள் இடம்பெறவில்லை. எனவே இது ஒரு தெரிவுக் கட்டுப்பாட்டு முறையாகும்.

இதனைத்தவிர வேறு ஒரு வகையளவான கட்டுப்பாட்டு முறைகள் அமைவது வர்த்தக வங்கிகளின் மூலதனம் மிகைநிதி ஆகியவற்றிற்கு மொத்தச் சொத்து அல்லது தெரிவுசெய்யப்பட்ட சொத்துக்கும் இடையில் ஒரு இழிவு அளவான விகிதத்தினை நிர்ணயித்தாகும. இம்முறையானது சிலவகையான தேவைகளுக்கு கடன்வழங்கும் அளவினைக் கட்டுப்படுத்துவதாகும்.

நாணயச் சட்டத்தின் 103வது பிரிவின்படி நாணயக்கடிதம் / கடன்கடிதம் (letter of credit) உருவாக்கப்படும்போது இறக்குமதியினால் செலுத்தவேண்டிய முற்பணத் தொகை அளவு நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படும். இதனால் இறக்குமதிகளின் பணம் முடக்கப்படும் நிலை ஏற்படுவதனால் இக்கடனைப் பெறுவதற்கு காட்டும் ஊக்கம் குறைக்கப்படும். அத்துடன் வட்டிவீதம் பணிசைத்தொகை, வேறு கட்டணங்களை நிர்ணயிக்கும் அதிகாரமும் 104ம் பிரிவின்படி மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது அத்துடன் முன்னுரிமை வழங்கப்பட்ட துறைகளுக்குக் கடன் வழங்கும்போது பணிசை, கழிவு கட்டணங்கள் ஆகியவற்றிற்கான உச்ச எல்லையும் மத்தியவங்கியால் நிர்ணயிக்கப்படலாம் மீள் நிதியிடல் திட்டத்தின் படியான கடன் வழங்கும்போது அறவிடப்படவேண்டிய வட்டிவீதம் மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படும்

தெரிவுக்கட்டுப்பாட்டு முறையில் கடன் கட்டுப்பாட்டினை மேற்கொள்வதற்கு மத்திய வங்கியினால் அண்மைக்காலங்களிலிருந்து பயன்படுத்தப்படும் கருவியாக தேசிய கடன் கொள்கை திட்டமிடல் அமைகின்றது அத்துடன் பிரதேச அபிவிருத்தி வங்கியை நிறுவுவதன்மூலமும் பிரதேச அபிவிருத்தியை முடுக்கிவிடக்கூடிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரசின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் முகவராக மத்தியவங்கி தொழிற்படுவதன்மூலம் மரபு ரீதியான தெரிவு ரீதியான கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு பொருளாதார வளர்ச்சியானது உரிய திசைக்கு நெறிப்படுத்துவதை இக்கட்டுரை ஓரளவிற்கு தெளிவு படுத்துகின்றது.

# Types of production
# உற்பத்தியின் வகைகள்

திரு நா சாந்திநாதன்
B. B. A (Hons) [Jaff]
ஆசிரியர் யா / இராமநாதன் கல்லூரி
பகுதிநேர விரிவுரையாளர் யாழ் தொழில்நுட்பக் கல்லூரி

## 1.0 அறிமுகம்

விரிவடைந்துவரும் நவீன துறைகளில் முகாமைத்துறையானது அண்மைக் காலத்தில் பிரபல்யம் பெற்றதாக விளங்குகிறது. அம் முகாமைத்துறையானது பின்வரும் 5 முகாமைக் கருமங்களை அடக்கியுள்ளதாக அமைகிறது. அவை உற்பத்தி முகாமை, சந்தைப்படுத்தல் முகாமை, நிதி முகாமை, ஆளணி முகாமை, ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை என்பதாக இருக்கின்றது. இவ்வாறான முகாமைக் கருமங்களில் அடிப்படை கருமமாக விளங்குவதே உற்பத்தி முகாமை ஆகும். (*Production Management*) உற்பத்தி முகாமை என்பது உற்பத்தி தொடர்பான கருமங்களை உள்ளடக்கியது ஆகும். ஆகவே ''உற்பத்தி'' என்பது பரந்த எண்ணக் கருவாக இருப்பதுடன் வர்த்தகத்துடன் பின்னிப் பிணைந்ததாகவும் காணப்படுவதனாலேயே உற்பத்தியினையும் அதன் வகைகளையும் ஆண்டு 10, 11 ஆம் ஆண்டுகளிலும், க.பொ.த உயர்தர வகுப்பில் வர்த்தகமும் நியும பாடத்திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது ஆனாலும் மாணவர்கள் மத்தியில் உற்பத்தியும் அதன் வகைகளும் பற்றிய பாட அலகில் கையாளப்படும் வெவ்வேறுபட்ட தமிழ் பதங்களினால் தெளிவின்மை தோன்றியுள்ளது. இவ்வாறான பதங்களை ஒன்று கூட்டி உற்பத்தியினையும் அதன் வகையினையும் தெளிவு படுத்துவதே இக் கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

## 2.0 உற்பத்தி

மக்களின் பயன்பாட்டிற்கென தேவையானவை எல்லாம் பொருட்கள், சேவைகள் என்பவற்றுள் அடங்குவதாக இருக்கும், இத்தகைய மனிதனால் பெருமளவில் வேண்டப்படுகின்றதும்

வளர்ந்து செல்வதுமான பொருட்கள், சேவைகளினை ஆக்கித் தருகின்ற கருமமே உற்பத்தியென வரையறுக்க முடியும். இதுவே பொருத்தமான வரைவிலக்கணமாகவும் அமையும். ஆனாலும் சிலர் மூலப்பொருட்களை முடிவுப் பொருளாக மாற்றும் நடவடிக்கையே உற்பத்தி என வரையறுத்தாலும் அங்கு சேவை உற்பத்தி என்பது உள்ளடங்குவது இல்லை. இதனால் பொருட்களை மட்டும் அன்றி சேவையின் உற்பத்தியும் உற்பத்தியினுள் உள்ளடக்கப்பட வேண்டும்,

இதனாலேயே ஒரு பொருளின் உருவத்தையும் இயல்பையும் மாற்றியமைத்து அவற்றின் பெறுமதியை அதிகரிக்கச் செய்தல் என்பது உற்பத்திக்கான வரைவிலக்கணமாகவே அமைந்துள்ளது எனக் கூற முடியும். அதனால் உற்பத்தி என்பதனை பொருள் உற்பத்தி சேவை உற்பத்தி என வகைப்படுத்த முடியும்,

## 3.0 *உற்பத்தியின் வகை*

உற்பத்தியின் வகையினை நோக்குகின்ற போது பொருள் உற்பததி சேவை உற்பத்தி என வகைப்படுத்த முடியும். அதன்பின் அவற்றின் வகைப்படுத்தலானது விரிவடைந்து செல்வதனால் அதனை அட்டவணை ரீதியாக நோக்குவோம்
(அட்டவணை 1.0 பார்க்கவும்)

## 3.1 *பொருள் உற்பத்தி*

ஐம்புலன்களினால் உணரக்கூடியதும் பணப்பெறுமதியுடையதுமான பொருட்களினது பெறுமதியினை மேலும் அதிகரிக்க செய்யும் நடவடிக்கையே பொருள் உற்பத்தி ஆகும். இது பிரித்தெடுத்தல் உற்பத்தி, தயாரித்தல் உற்பத்தி, நிர்மாண உற்பத்தி இனவிருத்தி உற்பத்தி என்று வகைப்படுத்தப்படுகின்றது.

## 3.1 *சேவை உற்பத்தி*

மனித விருப்பங்களைத் திருப்தி செய்யக் கூடியதும் கட்புலனாகததும் தொட்டுணர முடியாததும் கட்டணம் என்ற பரிமாற்றுப் பெறுமதியைக்கொண்டு பொருட்களின் பெறுமதியை அதிகரிக்க அதன் பயன்பாட்டை ஏற்படுத்த உதவும் உற்பத்தி சேவை உற்பத்தி எனப்படும். இச்சேவை உற்பத்தியானது இரு பிரிவுகளை உடையது அவை நேர் சேவை, நேரில் சேவை என்பனவாகும்.

## 3 பிரித்தெடுத்தல் உற்பத்தி அல்லது அகழ்வு உற்பத்தி
## Extractive Production

இயற்கையின் உதவியுடன் நிலத்தின் கீழ் கண்ணுக்கு புலப்படாமல் காணப்படும் பொருட்களை வெளிக்கொண்டு வருதல் அகழ்வு உற்பத்தியாகும். ஆனாலும் புவியின் மேற்பரப்பில் இருந்து எந்த மாற்றத்திற்கும் உட்படாமல் எடுக்கப்படும் இயற்கை வளங்களும் இதனுள் அடங்குவதாக இருக்கும்.

நடைமுறையில் சுரங்க கைத்தொழில் காட்டுவளக் கைத்தொழில், மீன்பிடிக்கைத்தொழில் போன்றவை எல்லாம் பிரித்தெடுத்தல் உற்பத்தியே ஆகும். இலங்கையில் அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனம், இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம், அரச கனிப்பொருள் கூட்டுத்தாபனம் என்பன எல்லாம் இவ்வுற்பத்தியினை மேற்கொள்ளும் அரச நிறுவனங்கள் ஆகும்.

வளங்கள் குறைவடையும் பண்பினை கொண்டுள்ளது என்பதனால் இவ்வுற்பத்தியினை ஈடுசெய்யக்கூடியது *(Replenshable)* என்றும் ஈடுசெய்ய முடியாதது *Non Keplnishable* என்றும் வகைப்படுத்தப்படுகிறது.

## 3.4 தயாரிப்பு உற்பத்தி அல்லது ஆக்க உற்பத்தி
## (Manufacturing)

தயாரித்தல் உற்பத்தி என்பது தொழிற்சாலைகளில் இடம் பெறக்கூடிய உற்பத்தியினைக் குறிப்பதாக அமையும். இதனால் மூலப் பொருட்களை அல்லது அரைகுறைப் பொருட்களைப் பயன்படுத்தி பயன்பாடு கூடியபொருளாக மாற்றிடுகை செய்வதாக அமையும். இதனால் இதனை மாற்றிடுகை உற்பத்தி எனவும் அழைக்கப்படுகின்றது.

இதற்கு உதாரணமாக மரத்திலிருந்து தளபாடம் செய்தல், மண்ணிலிருந்து மட்பாண்டம் செய்தல் என்பனவற்றினை குறிப்பிட முடியும்.

தொழிற்சாலைக்குள் இடம்பெறும் உற்பத்தியாக காணப்படுவதனால் இதனை மேலும் இரண்டு உற்பத்தியாக வகுத்துக் கொள்ள முடியும். அவை

1) புரள்மான உற்பத்தி
2) கோப்பு அல்லது இணைப்பு உற்பத்தி என்பனவாகும்.

### 3.4.1 புரள்மான உற்பத்தி [Turnover Production)

புரள்மான உற்பத்தி என்பது நுகர்வோருக்கு பயன் படாதிருக்கும் மூலப்பொருட்களை எல்லாம் அவற்றினை பய னுள்ள முடிவுப் பொருளாக மாற்றிக் கொடுக்கின்ற உற்பத்தி யாகும்.

இவ்உற்பத்தி வகையிலே மனிதனுக்கு தேவைப்படும் பெருந்தொகையான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதாக அமைகின்றது. குறிப்பாக தளபாட உற்பத்தி, சீமெந்து உற் பத்தி, கடதாசி உற்பத்தி, ரயர் உற்பத்தி என்பனவெல்லாம் இதனுள் அடங்குவதாகவிருக்கும்.

### 3 4.2 கோப்பு உற்பத்தி அல்லது இணைப்பு உற்பத்தி (Assembling)

இதுவும் தயாரிப்பு உற்பத்தியின் ஒரு பிரிவாக காணப் படுவதுடன் இங்கு பல உதிரிப்பாகங்கள் ஒன்றாக இணைத்து உற்பத்திகள் இடம்பெறுவதனைக்குறிக்கும். இத்தகையவெவ்வேறு நிறுவனங்களிடமிருந்து உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்ப டும். பின்னர் அவை இணைக்கப்பட்டு முடிவுப்பொருட்கள் ஆக்கம் செய்யப்படும். இதனால் ஒரு முடிவுப் பொருளின் உற்பத்திக் கென பல்வேறு உதிரிப்பாகங்கள் இணைக்கப்படுவதனால் இணைப்பு உற்பத்தி எனவும் கூறப்படுகின்றது.

பொதுவாக வானொலி உற்பத்தி, தொலைக்காட்சி உற்பத்தி, மோட்டார் வாகன உற்பத்தி போன்றன எல்லாம் காப்பு உற்பத்திக்கான உதாரணங்களாகும்.

### 3.5 நிர்மாண உற்பத்திகள் [Construction]

நிர்மாணக் கைத்தொழில் அல்லது உற்பத்தி என்பது நீண்டகாலப் பாவனைக்குரிய பொருட்களை உற்பத்தி செய் கின்ற கைத்தொழிலைக் குறிக்கும். இவை அதிக பணச்செலவு டன் இடம்பெறுவது மட்டுமன்றி நீண்ட கால பாவனையைக் குறிக்கோளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுவதாக இருக் கும்

இவ்வுற்பத்தியில் கட்டடங்கள், பாதைகள், பாலங்கள் என்பன நிர்மாணிக்கப்படுவதாக இருக்கும். நாட்டின் நீண்ட கால அபிவிருத்திக்கு நிர்மாண உற்பத்தியும் அவசியம் என்பதனால் பொருள் உற்பத்தியில் இதுவும் அடங்குவதாக இருக்கும். இலங்கையில் நிர்மாண உற்பத்திக்கென தெரு அபிவிருத்தி அதிகார சபை, வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை என்ற அமைப்புக்களை அரசு நிறுவியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 3.6 இனவிருத்தி உற்பத்தி அல்லது விவசாய உற்பத்தி (GeneticProduction)

இனவிருத்தி உற்பத்தி என்பது இனங்களை விருத்தி செய்வதுடன் குறிப்பாக கமத்தொழில் நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட உற்பத்திகளைக் குறிக்கும். பறவைகள், செடிகள், மிருகங்கள் ஆகியவற்றின் உற்பத்தியை இவ்வுற்பத்திக்குள் அடக்கிக் கொள்ள முடியும். தற்காலத்தில் கமத்தொழில் உற்பத்திகள் கூட பேரளவு உற்பத்திகளைக் கருத்தில் கொண்டு பாரிய கைத்தொழில்களாக மாற்றம் பெற்று இருப்பதால் இவ்வுற்பத்தி வகையினையும் பொருள் உற்பத்தியின் வகையினுள் அடக்கிக் கொள்ள முடியும்.

### 4:0 சேவை உற்பத்தியின் வகைகள்

சேவை உற்பத்தியினைப் பொதுவாக நேர் சேவை நேரில்சேவை அல்லது துணைநிலைச்சேவைகள் என 2ஆக வகைப்படுத்தப்பட முடியும். இவ்விரு சேவைப் பிரிவுகளுமே பொதுவாக வர்த்தக சேவை இலவச சேவை என்பதற்குள் அடக்க முடியும்.

### 4:1 நேர்சேவை Direct Services

நேர் சேவை என்பது தனி ஒருவரால் உற்பத்தி செய்யப்பட்டு தாமே அச்சேவையினை நேரடியாக வழங்குவதாக இருக்கும். இங்கு குறித்த நபர் தானே அச்சேவையினை உற்பத்தி செய்து தனது பெயரிலேயே அதனை வழங்கி வருவார். இதற்கு உதாரணமாக வைத்தியரினால் நேரடியாக வழங்கப்படும் மருத்துவ ஆலோசனை, ஆசிரியரால் வழங்கப்படும் கல்விச் சேவை என்பதனை குறிப்பிட முடியும்.

### 4:2 நேரில் சேவை Indirect Services

நேரில் சேவை என்பது தனிப்பட்டவர் என்றில்லாது நிறுவனத்தின் பலரது சேவைகளை ஒன்று சேர்த்து நிறுவனத்தின் பெயரில் வழங்கப்படுவதாக இருக்கும். இங்கு தனிப்பட்ட சேவை நேரடியாக கிடைக்காது என்பதால் நேரில் சேவை என அழைக்கப்படுகிறது. இதற்கு உதாரணமாக இலங்கைப் போக்கு

வரத்துச் சேவை, இலங்கை வங்கிச் சேவை, காப்புறுதிச் சேவை என்பனவற்றைக் குறிப்பிட முடியும்.

## 4:2 வர்த்தக சேவை Commercial Services

வரையறுக்கப்பட்ட உற்பத்தி கொண்டதும் பணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டே வாங்கப்பட வேண்டியது மான வர்த்தக நோக்கத்தை அடிப்படையாக கொண்டு மேற் கொள்ளப்படும் சேவைகள் அனைத்தும் வர்த்தக சேவை எனப் படும். இவை அரச நிறுவனங்களாலும் தனியார் நிறுவனங்க ளாலும் மேற்கொள்ளப்படுவதாக இருப்பதுடன் இவ்வர்த்தக சேவைகள் நேர் சேவைகளும் நேரில் சேவைகளும் உள்ளடக்கப் படுவதாக இருக்கும்.

குறிப்பாக இலாப நோக்கம் கருதி வழங்கப்படும் சேவைகளான போக்குவரத்துச் சேவை, வங்கிச் சேவை தனி யார் கல்வி நிறுவன சேவை, என்பனவற்றினை உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

## 4:3 இலவச சேவை Free Services

பணக் கொடுப்பனவு எதுவும் வழங்கப்படாது தேவை யிலும் பார்க்கக் கூடியளவில் இலவசமாக கிடைக்கும் சேவை களே இலவச சேவைகள் ஆகும் அதனால் தான் இவ் இலவச சேவையின் பெரும்பகுதியினை சமூக நலனில் அக்கறையுள்ள அரசு வழங்குவதாக இருக்கும் இதனுள் நேர்ச்சேவை, நேரில் சேவை என்ற இரண்டும் அடங்குவதாக இருக்கும். இச்சேவை களுக்கு உதாரணமாக இலவசக் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு என்பவற்றைக் குறிப்பிட முடியும்

## 5:0 முடிவுரை

மனித தேவைக்குரிய சகல பொருள்கள் சேவைகளின் உற்பத்தியும் இவ்வகைப்படுத்தலுக்குள் அடங்குவதனால் இவ் வகைப்படுத்தலானது பூரணமாக உள்ளது எனக் கருத முடியும் அத்துடன் இக்கட்டுரையில் உற்பத்தி தொடர்பாக பயன்படுத் தப்படும் பல்வேறு பதங்களையும் ஒன்றிணைத்து அவற்றுக்கான உதாரணத்துடன் அட்டவணைப்படுத்தி இருப்பதனால் ஆரம்ப மட்டத்தில இருந்து வர்த்தகம் கற்கும் மாணவர்களுக்கும் கல் விப் பொதுத் தராதர உயர்தர வர்த்தக மாணவர்களுக்கும் இவ்வத்தியாயம் தொடர்பாக இருந்த தெளிவின்மையை நீக்கி பூரண தெளிவினைக் கொடுக்கும் என நம்புகின்றேன்.

உசாத்துணை நூல்கள்:

*Modern Production Mrnagement by — Buffa*

# உற்பத்தி வகைகள் அவற்றுக்கான உதாரணமும்

| உற்பத்தி வகை | பயன்படுத்தப்படுகின்ற ஏனைய தமிழ்ப் பதங்கள் | உற்பத்திகளின் உதாரணம் | பங்குபற்றும் நிறுவனம் |
|---|---|---|---|
| 1. பொருள் உற்பத்தி<br>1.1 பிரித்தெடுத்தல் உற்பத்தி<br>*Apstrative Production* | அகழ்வு உற்பத்தி<br>முதல் உற்பத்தி | சுரங்கத் தொழில், காட்டுத் தொழில், மீன்பிடித்தொழில் | கனிப்பொருள் கூட்டுத்தாபனம் / மீன்பிடிக் கூட்டுத்தாபனம் |
| 1 2 தயாரிப்பு உற்பத்தி<br>*Manu Facturing Production* | ஆக்க உற்பத்தி<br>மாற்றிடுகை உற்பத்தி | தளபாடம் செய்தல்<br>மோட்டார்வாகனம் உற்பத்தி செய்தல் | சீமெந்துக் கூட்டுத்தாபனம்<br>மட்பாண்டக் கூட்டுத்தாபனம் |
| 1.2.1 புரள்மான உற்பத்தி<br>*Turnover Production* | புறழ்வுக் கைத்தொழில்<br>மாற்று உற்பத்தி | கடதாசி உற்பத்தி<br>ரயர் உற்பத்தி | கடதாசி கூட்டுத்தாபனம்<br>ரயர் கூட்டுத்தாபனம் |
| 1.2.2 கோப்பு உற்பத்தி | பொருத்துதல்<br>இணைத்தல் | வானொலி தயாரித்தல்<br>மோட்டார் வாகனம் தயாரித்தல் | லங்கா அசோக் லேடன் லிமிட் |
| 1.3 நிர்மாண உற்பத்தி | கட்டுமான உற்பத்தி<br>முதல் செறிவான உற்பத்தி | பாலம் அமைத்தல்<br>தெரு அமைத்தல் | கட்டிட திணைக்களம் தெரு அபிவிருத்தி அதிகார சபை |
| 1.4 இனவிருத்தி உற்பத்தி | விவசாய உற்பத்தி | செடிகள், மிருகங்கள் வளர்ப்பு | மரமுந்திரிகைகூட்டுத்தாபனம் |
| 2.0 சேவை உற்பத்தி<br>2.1 நேர்சேவை | நேரடிச்சேவை | ஆசிரியர்சேவை<br>வைத்தியசேவை | பாடசாலை<br>வைத்தியசாலை |
| 2.2 நேரில்சேவை | மறைமுகசேவை | போக்குவரத்து / காப்புறுதி | இலங்கை போகுவரத்து சபை<br>காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |
| 2.3 வர்த்தகசேவை | துணைநிலைச்சேவை | வங்கிச்சேவை<br>காப்புறுதிச்சேவை | இலங்கை வங்கி<br>காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |
| 2.4 இலவசசேவை | | பாதுகாப்பு/கல்வி<br>மருத்துவம் | பாதுகாப்புப் படை<br>பாடசாலை |

| | | | |
|---|---|---|---|
| | | | காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |
| 2.3 வர்த்தகசேவை | துணைநிலைச்சேவை | வங்கிச்சேவை | இலங்கை வங்கி |
| | | காப்புறுதிச்சேவை | காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |
| 2.4 இலவசசேவை | | பாதுகாப்பு/கல்வி<br>மருத்துவம் | பாதுகாப்புப் படை<br>பாடசாலை |

அட்டவணை 02

# உற்பத்தி வகையின் பரம்பல் அட்டவணை




அட்டவணை 01

# குத்தகை LEASING

எல். பி. ஞானப்பிரகாசம்
ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி.

## 1.0 அறிமுகம்

பொதுவாக எமது நாட்டில் ''குத்தகை'' என்ற எண்ணக்கரு நிலம், கட்டிடம் என்ற ஆதனங்களை நீண்டகால உடன்படிக்கையின் கீழ் வாடகைக்குப் பெறுகின்ற அல்லது வழங்குகின்ற செயற்பாட்டைக் குறித்து நின்றது. ஆனால் இன்று அது நிலம் கட்டிடம் என்ற ஆதனங்களோடு மட்டும் சம்பந்தப்படும் விடயமாக அன்றி ஏனைய சொத்துக்களோடும் தொடர்புறும் விடயமாக நீண்டகால நிதியிடல் செயற்பாட்டில் நிதி முகாமைத்துவத்தின் கவனஈர்ப்பு விடயமாக விரிவான அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாவது உலக யுத்தத்தைத் தொடர்ந்து குத்தகை ஒரு பெரிய தொழிலாக உலகில் மாறியுள்ளது. ''குத்தகைக் கம்பனிகள்'' என்று ஒருவகைக் கம்பனிகள் உலகெங்கனும் உருவாகியுள்ளன. பெருமளவிலான இயந்திரங்கள், கருவிகளை அவை உடமையாகக் கொண்டு அவை இத்தொழிலில் பெருமளவு இலாயம் ஈட்டுகின்றன. இலங்கையிலும் துரித மகாவலி அபிவிருத்தித் திட்ட சகாப்தத்தைத் தொடர்ந்து ''குத்தகைத்'' தொழிலும் குத்தகைக் கம்பனிகளும் முக்கியத்துவம் பெறத் தொடங்கி 993ம் ஆம் ஆண்டில் குத்தகைக் கம்பனிகளினால் நிறைமவற்றப்பட்ட குத்தகைகளின் மொத்தப் பெறுமதி ரூபா 11,400 இலட்சமாக விளங்கியது கைத்தொழில், நிருமாணம, பணிக்ள் மட்டுமன்றி குத்தகை நிதியிடலுக்கான ஆகக்கூடிய கேள்வி வர்த்தக ஊர்த்திகளுக்கானவையாகக் காணப்படுகின்றன பரீட்சை வினாப்பத்திரங்களிலும் குத்தகை வகைகள் பற்றியும், ஐந்தொகைக்கு வெளியே நிதியீடல் (Off The Ba'ance Finance) பற்றியும் வினாக்கள் கேட்கப்படுகின்றன இந்த வகையில் குத்தகை வகைகள், அவற்றுக்கிடையிலான நிபந்தனை வேறுபாடுகள் பற்றிய சிறிய விளக்கத்தை மட்டும் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 2.0 வரைவிலக்கனம்

குத்தகை என்பது ஒரு சொத்தின் உடமையாளரால் அத்சொத்தை வேறொரு கட்சியினர் குறிக்கப்பட்ட இணங்கிய காலப்பகுதிக்கு கொடுப்பனவுகளைச் செலுத்தி பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கும் உடன்படிக்கையாகும். இங்கு சொத்தின் உடமையாளர் ''குத்தகைக்காரர்'' (*LESSOR*) எனவும், சொத்தினைப் பயன்படுத்தும் நபர், அல்லது நிறுவனம் ''குத்தகையாளி'' (*LESSEE*) எனவும் அழைக்கப்படுவர்.

## 3.0 குத்தகையின் வகைகள்

வரலாற்று ரீதியாக குத்தகைகள் பின்வரும் அடிப்படைகளைக் கொண்டு ஒன்றில் தொழிற்பாட்டுக் குத்தகை (*Operating*) அல்லது நிதிக்குத்தகை (*Finacial*) என பாகுபடுத்தப்படலாம்,

அ குத்தகையின் ஆயுள், சொத்தின் பயன்தரு பொருளாதார ஆயுளுடன் ஒப்பிடுவதன் மூலம்

ஆ சொத்தின் பராமரிப்பும், திருத்தலும் குத்தகைக்காரரா குத்தகையாளியா செய்வது?

இ குத்தகைக்காரர் சொத்தின் கிரயம் முழுவதையும் குத்தகைக் கொடுப்பனவாக அறவிட முடியுமா?

ஈ குத்தகை காலாவதியாகத்தக்க இனத்திற்கு ல்பே இத்துச் செய்ய முடியுமா?

### 3.1.0 நிதிக்குத்தகை

பொதுவாக மிகக்கூடுதலான அளவில் காணப்படுவது நிதிக்குத்தகையே. இவ்வகையான குத்தகையில் குத்தகையாளியினால் தெரிவு செய்யப்படும் சொத்திற்கான கொடுப்பனவை குத்தகைக்காரர் செலுத்துவார், குத்தகையாளி சொத்தினை முழுமையாகப் பயன்படுத்துவார், இதற்காக மாதாந்தக் கொடுப்பனவை குத்தகைக்காரராகிய குத்தகைக் கம்பனிக்குச் செலுத்துவார். இது பொதுவாக இலங்கையில் இரண்டு தொடக்கம் ஐந்து வருட காலப் பகுதியாக வழமையாகக் காணப்படுகிறன

இந்த முதன்மைக் காலத்தின் போது (Primary Period) சொத்தின் முழுக்கிரயமும் அறவிடப்பட்டுவிடும். குத்தகையாளி சட்டப்படி சொத்துக்கு உரிமையாளராகமாட்டார். முதன்மைக் காலத்தின் முடிவில் குத்தகையாளிக்கு மூன்று விதமான தெரிவுகளுக்கு இடமுண்டு. ஒன்றில் சொத்தினை பெயரளவுத் தொகைக்கு மூன்றாம் நபர் மூலமாக வாங்கலாம். (வாடகைக் கொள்வனவு நடைமுறைகளைத் தவிர்ப்பதற்காக) அல்லது குறைந்த பெயரளவில் வாடகைக்கு (Very Nominal Rental) குத்தகையினைத் தொடரலாம் அல்லது சொத்தினை திருப்பிக் கொடுக்கலாம். மற்றைய நாடுகளில் குத்தகை நீண்ட காலத்தைக் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது. பெரும்பாலான குத்தகையாளிகள் சொத்தானது தனது ஆயுளின் பெரும்பகுதியை அவர்களுடனேயே கழித்ததால் அதை கொள்வனவு செய்யவே விரும்புகிறார்கள்.

... நிதிக் குத்தகையில் குத்தகைக் கொடுப்பனவுகள் காலம் முழுவதும் நிலையானதாக இருக்கும். எனவே குத்தகைக் கம்பனி வட்டிவீத உயர்வு, பணவீக்கம் போன்ற நிலைமைகளின் ஆபத்தைப் பொறுப்பேற்கிறது- மறுபுறமாக குத்தகையாளி தனது செயற்றிட்டம் இலாபகரமானதாக இல்லாவிட்டாலும் சொத்து பழமையடைந்து விட்டாலும் தனது கொடுப்பனவுகளைச் சீராகச் செலுத்தியே தீரவேண்டும். குத்தகையாளி கொடுப்பனவுகளை செலுத்தத் தவறினால் குத்தகைக் கம்பனி சொத்தினை மீளப் பெறமுடியும், ஆனால் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறியமை உண்மையான பிரச்சனைகளினால் எனின் கொடுப்பனவுகளை மீள ஒழுங்கமைக்க முன்னுரிமை அளிக்கப்படலாம்.

### 3.1.1 தொழிபாட்டுக் குத்தகை

இந்தவகைக் குத்தகையின் குத்தகைக் காலம் குறுகியதாக இருக்கும் அத்துடன் எந்த வேளையிலும் குத்தகையாளி முன்னறிவித்தல் கொடுத்து இதை இரத்துச் செய்யலாம். சொத்து குத்தகைக் கம்பனியினால் பராமரிக்கப்படும். குத்தகைக் கொடுப்பனவுக்குள் பராமரிப்புக் கிரயமும் உள்ளடக்கப்படும் இவ்வகைக் குத்தகையை சேவைக் குத்தகை (Service Leases) பராமரிப்பு குத்தகை (Maineuance Leases) முழுக் கொடுப்பனவற்ற குத்தகை (Non - Full - Payout Leases) எனப் பல்வேறு பெயரிட்டும் அழைக்கப்படுகின்றது.

## 3.1.2 விற்றலும் மீண்டும் குத்தகைக்கு எடுத்தலும்

நிதிக்குத்தகை, தொழிப்பாட்டுக் குத்தகை என்ற வரலாற்று ரீதியான பாகுபாட்டுக்குப் புறம்பாக மூன்றாவது வகையாக இது காணப்படுகின்றது. ஒரு கம்பனி சொந்தமாக காணி கட்டிடத்தை வைத்திருக்குமாயின் அதனை நிதிநிறுவனத்திற்கு விற்று அதேவேளை அச்சொத்தை நீண்டகால குத்தகைக்குப் பெறுதல் இம்முறையில் காணப்படும். இதன் விளைவாக கம்பனிக்கு ஒரு தொகை மூலதனம் கிடைக்கிறது. சொத்தின் திருத்தம், பராமரிப்பு எல்லாம் சொத்தினை வாங்கிய நிதி நிறுவனமே செய்ய வேண்டும்

(பக்கம் 19 இல் அட்டவணையைப் பார்க்க)

## 4.0 இலங்கையில் குத்தகைக் கம்பனிகள்

எல்லாமாக இதுவரையில் மூன்று குத்தகைக் கம்பனிகள் இலங்கையில் குத்தகைத் தொழிலில் ஈடுபடுகின்றன. அவை

1 லங்கா ஓறியன்ஸ் (ஓறிக்ஸ்) லீசிங் கம்பனி லிமிட்டெட்
2 மேக்கன்டைல் லீசிங் லிமிட்டெட்
3 மகாராஜா லீசிங் கம்பனி லிமிட்டெட் இவை மூன்றும் 1980களில் தொழிலாற்றத் தொடங்கின.

## 5.0 முடிவுரை

1987 ஏப்பிரலில் இலங்கைப் பட்டயக்கணக்கறிஞர் நிறுவனம் ''குத்தகைகளுக்கான கணக்கீட்டு'' நியமத்தை (S. L. A S 19) வெளியீடு செய்துள்ளது. இதில் தொழிற்பாட்டுக் குத்தகை நிதிக்குத்தகை என்பனவற்றுக்கான வேறுபாடுகளும் அவை எவ்வாறு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்பது பற்றியும் விதந்துரைத்துள்ளது எனவே இவற்றின் நிதிமுகாமைத்துவம், கணக்கீட்டு முறைகள் பற்றிய விரிவான விளக்கத்தைக் கொண்ட மேலும் பல கட்டுரைகள் தமிழில் வெளிவருதல் வரவேற்கத்தக்கது.

உசாத்துணை:

1 *Raymond P. Neveu Fundamentals of Managerial Finance — 1985*

2 *A. H. M Bennett Management Accountancy In Sri Laaka*

3 இலங்கை மத்தியவங்கி அறிக்கை — 1993

# தொழிற்பாட்டுக் குத்தகை, நிதிக்குத்தகை வகைகளின் பண்புகள்

| பண்புகள் | தொழிற்பாட்டுக் குத்தகை | நிதிக்குத்தகை |
|---|---|---|
| 1. உடன்படிக்கையின் ஆயுள் | சொத்தின் பயன்தரு பொருளாதார ஆயுளைவிடக் குறைவாக இருக்கும். | ஏறத்தாழ பயன்தரு பொருளாதார ஆயுள் அளவாக இருக்கு |
| 2. பராமரிப்பும் திருத்தமும் | குத்தகைக்காரரால் பொறுப்பேற்கப்படும், அத்துடன் குத்தகைக் கொடுப்பனவினுள் உள்ளடக்கப்படும். | குத்தகைக்காரரால் பொறுப்பேற்கப்படுகில் அதற்கென தனியான ஒப்பந்தம் செய்யப்படும். |
| 3. குத்தகைக் கொடுப்பனவு | சொத்தின் கிரயத்தை மீளப்பெற போதுமானதாகஇருக்காது | சொத்தின் கிரயத்தை மீளப்பெறக்கூடியதாகவும், இலாபத்தை தருவதாகவும் இருக்கும். |
| 4. குத்தகை இரத்துச்செய்தல் | காலாவதியாகும் திகதிக்குமுன் இரத்துச் செய்யக்கூடியது. | மேலதிக கொடுப்பனவைச் செய்தால் மட்டுமே குத்தகையாளி இதனை இரத்துச் செய்யலாம். |

# இருப்புத் தொழிற்பாட்டுக் கணக்கீடு
# Accounting for Merchandising Operations

செ. க. கதிரமலை

*B. Com, H. N. Dip-in-Com, Dip-in-Edu*

**அறிமுகம்**

பொருட்கள் கொள்வனவு செய்யும் போது விலைகள் மாறுவதையும், பொருட்கள் மாறாதிருப்பதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்த விலை மாற்றம் வியாபாரத்தில் இருப்புத் தொடர்பான பதிவில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். எடுத்துக்காட்டாக; சில்லறைக் களஞ்சியமொன்று தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை 15000 ரூபா விலைப்படி கொள்வனவு செய்து 18000 ரூபா விலையில் விற்பனை செய்கிறது. தொடர்ந்து வரும் ஏழலில் அச்சொட்டாக அதேரகத் தொலைக்காட்சிப் பெட்டியை சில்லறைக் களஞ்சியம் மீள 16000 ரூபாப்படி கொள்வனவு செய்கிறது. இப்பொழுதும் அச்சில்லறைக் களஞ்சியம் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை 18000 ரூபா விலைப்படி விற்பனை செய்கிறது. இந்நிலையில் மொத்த இலாபத் தொகை எவ்வளவு என அறிக்கையிடுவது? எந்த தொலைக்காட்சிப் பெட்டி விற்பனையால் இலாபம் கிடைத்தது? போன்ற வினாக்களுக்கு கணக்காளர் விடை பெற இருப்புத் தொழிற்பாட்டுக் கணக்கீடு பற்றிய அறிவு அவசியமாகின்றது.

வளர்ந்து வரும் நிதிக் கணக்கியல் துறையில் வியாபார இருப்புத் தொடர்பான பின்வரும் அம்சங்கள் கணக்காளர்களின் கவன ஈர்ப்புக்கு உள்ளாகி உள்ளன. எனவே இக்கட்டுரை இருப்பு கணக்கீட்டின் நோக்கம், குறுங்கால இருப்புக்கள்; இருப்புத் தொடர்பான அடிப்படை எண்ணக் கருக்கள், வழமையாக பின்பற்றும் கிரயமதிப்பீட்டு முறைகள், இருப்பின் உள்ள

ணடக்கப்படும் இரயம், பதில் வைப்புக் இரயம், தேறிய கைக்கிட்டும் பெறுமதி, காலமுறையில் இருப்பு எடுப்பதில் ஏற்படும் பிழைகள், நிறைவான இருப்பு பதிவின் சிறப்பு, இருப்புக் கிரய மதிப்பீடு போன்ற விடயங்கள் பற்றிய அறிமுக விளக்கங்களை வழங்குகின்றது.

## 1.0 இருப்புக் கணக்கீட்டின் நோக்கம்:

சரக்கிருப்புத் தொடர்பான கணக்கிடலின் முக்கிய நோக்கம் பொருத்தமான இரயத்தை பெறுவனவோடு ஒப்பிட்டு வருமானத்தைத் தீர்மானிப்பதாகும்.

## 1.1 இருப்பு

மீள்விற்பனைக்காக கொள்வனவு செய்த சரக்கு, மூலப் பொருள், முடிவுப்பொருள், புத்துருவாகும் வேலை என்பன குறுங்கால இருப்பாகவும், நடைபெறும் வேலையாகவும் (WIP) கருதப்படுகிறது. ஆனால் வணிக நிறுவனங்களில் சாதாரண வியாபார நடவடிக்கையின் போது விற்பனைக்காக இருக்கும் தொட்டுணரக்கூடிய சொத்து இருப்பு எனப்படுகிறது.

## 1.2 இருப்பு மதிப்பிடல் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள்

1.2.1 இந்தொகையில் உள்ள இருப்பின் பெறுமதி நிறுவனம் தொடர்ந்தும் இயங்கும் என்ற தொக்கி நிற்கும் எண்ணக்கருவை முன் உணர்த்துவதுடன், அந்த இருப்பு பாவிக்கப்படும் அல்லது வியாபாரத்தின் ஒழுங்கான செயல்பாட்டுக்கு உட்படுத்தப்படும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

1.2.2 வரலாற்றுக் கிரயத்தை விட தேறிய கைக்கிட்டும் பெறுமதி (NRV) குறைவாக இருந்தால் ஐந்தொகையில் இருப்பு தேறிய கைக்கிட்டும் பெறுமதியில் காட்டப்படுவதன் மூலம் முன்னெச்சரிக்கை எண்ணக்கரு பின்பற்றப்படுகிறது. நன்மையில் நம்பிக்கை கொண்டு இருப்பின் குறைந்த பெறுமதியை ஐந்தொகையில் காட்டுவதன் மூலம் சகல நட்டத்தையும் அங்கீகரித்து, எதிர்பார்க்கும் இலாபங்களை எடுத்தியம்பா நிலை ஏற்கப்பட இவ்வெண்ணக்கரு வித்திடுகிறது.

1.2.3 இருப்புக் கணிப்பு அடிப்படை முறைகள் வேறுபட்ட இருப்புக்களுக்கு எவ்முறையில் கணிக்கப்பட்டதோ. அவ்வடிப் படை முறைகள் அந்தந்த இருப்புகளுக்கு தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் பின்பற்றப்படுவதன் மூலம் கொள்கை மாறாமை எண்ணக்கரு கடைப்பிடிக்கப்படுகிறது. இதன் மூலம் கணக்கியல் அறிக்கைகளை காலத்திற்கு காலம் ஒப்பிட முடியும். அடிப் படை இருப்புக் கணிப்பு முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட் டால் அதற்குரிய காரணத்தையும், ஏற்பட்ட தாக்கத்தையும் நிறுவனம் நிதி அறிக்கையில் வெளிப்படுத்தல் வேண்டும்.

1.2.4 விற்ற சரக்கின் கிரயத்திற்கெதிராக அவ்வாண்டிற்குரிய விற்பனை முழுவதும் வருமானமாகப் பெறப்பட்டது எனக் கருதுவதன் மூலம் அட்டுறு எண்ணக்கரு அமுலாக்கப்படுகிறது.

## 2.0 இருப்பு உருப்படிக்கிரய மதிப்பீடுர், வழமையாக மேற்கொள்ளப்படும் நான்கு முறைகளுர்.

### 2.1 குறிப்பிட்ட பட்டியல் விலைமுறை அல்லது அல குக் கிரயமுறை [Specific invoice prices]

உண்மையில் பொருட்களின் பௌதீக ரீதியிலான உட் பாய்ச்சல், வெளிப்பாய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட முறை இதுவாகும். ஒவ்வொரு இருப்பு உருப்படியும் அதனுடைய பட்டியல் விலையில் காட்டப்படும். அத்துடன் உயர்விலையு டைய குறைந்த அலகுப் புரள்வுடைய பொருட்களுக்கு மட்டும் இம்முறை நடைமுறையில் உபயோகிக்கப்படும், உ+ம் நகை, மோட்டார்வாகனம்

### .2 நிறையளித்த சராசரிக் கிரயம்

ஆரம்ப இருப்பினதும் கொள்வனவினதும் மொத்தக் கிரயத்தை அலகுகளின் எண்ணிக்கையால் பிரித்து நிறையளித்த சராசரிக் கிரயத்தைக் கணிக்கலாம். இம்முறை விலைகளில் ஏற்படும் தளம் பலை சீராக்க உதவும்.

### 2.3 முதல் உள் முதல் வெளி FIFO

முதல் உள் முதல் வெளி முறையில் பழைய பொருட்கள் முதலில் விற்பனை செய்யப்படும் என்றஎடுகோளின் கீழ் பொரு ளின் கிரயம் மதிப்பிடப்படும். இம்முறையில் இந்தொகையில் உருப்படிகளின் கிரயம் நடைமுறைப் பதில் ஈவபபுக் கிரயத் திற்கு மிக அண்மித்துக் காணப்படும்.

## 2.4 கடைசி உள் முதல் வெளி LIFO

கடைசி உள் முதல் வெளி முறையில் மிக அண்மித்த கொள்வனவு முதலில் விற்பனை செய்யப்படும் என்ற ஏற்றுக் கொள்ளலில் கீழ் கிரயம் மதிப்பிடப்படும். நடைமுறைக் கிரயமும் வருமானமும் சிறப்பாகப் பொருந்திப் பார்க்கப்படுவது இம்முறை உபயோகத்தின் பெறுபேறாக அமையும். மேலும் தொடரும் காலப்பகுதியில் பொருளின் விலை அதிகரித்துச் செல்லும்போது இம்முறையைப் பின்பற்றுவோர் வரிநயப்பாட்டைப் பெற்றுக் கொள்வர்.

## 3.0 இருப்பில் உள்ளடக்கப்படும் கிரயம்

விற்பனையுடன் சம்பந்தப்பட்ட வியாபார நிறுவனத்திற்கு உரித்துடைய பொருட்கள் எவ்விடத்தில் இருந்தாலும் அவை இருப்பில் உள்ளடக்கப்படும்.

பொருளொன்றை தற்போதுள்ள நிலைக்கு கொண்டு வருவதற்கும், அமைவிடத்திற்கு கொண்டு வருவதற்குமான அனைத்துச் செலவுகளும் சரககிருப்புக் கிரயத்தில் சேரும்.

## 4.0 கிரயம் அல்லது சந்தை இதில் எது குறைவோ அவ்விதி
Lover of cost or Market rule

பதில் வைப்புக் கிரயம் (சந்தை) குறைவாகவில்லாத விடத்து இருப்பில் கொள்வனவுக் கிரயம் சாதாரணமாகப் பதியப்படும்,

4.1 சந்தை என்பதன் கருத்து சாதாரணமாகப் பதில்வைப்புப் கிரயமாகும் பதில் வைப்புக் கிரயம் இருப்பில் குறைவு ஏற்பந்த அந்நிலையில் விற்பனைவிலை சாதாரணமாகக் குறைய இதன் பெறுபேறாக நட்டம் ஏற்படும். இந்த நட்டம் வருடாந்த விலைக் குறைப்பில் கட்டாயம் அறிக்கையிடப்படும்.

## 4.2 சந்தை என்பது சாதாரணமாகப் பதில் வைப்புக் கிரயமாகும். இதற்கு விதிவிலக்காக அமையும் விதிகள்

4.2.1 எதிர்பார்க்கும் விற்பனை விலையிலிருந்து விற்பனைக் கான செலவினங்களை கழிக்கவரும் பெறுமதியாகிய தேறிய

கைக்கிட்டும் பெறுமதி பதில் வைப்புக் கிரயத்தை விடக் குறைந்தால் சந்தை என்பதன் வரையறை தேறியகைக் கிட்டும் பெறுமதியாகும்.

4.2.2 பதில் வைப்புக்கிரயம் தேறிய கைக்கிட்டும் பெறுமதியை விடக் குறைந்தால் வித்தியாசம் சாதாரண லாப எல்லையாக அமையும். இந்நிலையில் சந்தை என்பதன் வரையறை தேறிய கைக்கிட்டும் பெறுமதியிலிருந்து சாதாரண லாப எல்லை நீக்கிய பெறுமதியாகும்.

## 5.0 கிரயம் அல்லது சந்தை எது குறைவோ அது பிரயோகிக்கப் படும் இரு வழிமுறைகள்

5.1 இருப்பில் முழுப்பொருட்களும் ஒன்றாக இடம் பெறும்

5.2 இருப்பில் ஒவ்வொரு உற்பத்திப் பொருட்களும் வெவ்வேறாக இடம் பெறும்.

குறிப்பு:- தெரிவு செய்யப்படும் முறை தொடர்ந்து வரும் காலத்திற்கு மாறாது பின்பற்றப்படல் வேண்டும்.

## 6.0 இருப்புப் பிழைகள் - காலமுறையில்

## Inventory errors- Periodice system

6.1 ஒரு காலப்பகுதியின் முடிவில் பொருட்கள் இருப்பு எடுப்பதனால் அதிக கவனம் அவசியமாகும். காரணம் இருப்பு எடுப்பில் அதிக பொருட்கள் இருப்பதால் பிழைகள் உடனடியாகக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் இடம் பெறக்கூடும்.

6.2 ஒரு காலப்பகுதியின் இறுதி இருப்பு அடுத்த காலப்பகுதியின் ஆரம்ப இருப்பு ஆகும். இந்நிலையில் இருப்பில் ஏற்படும் பிழை தேறிய வருமானத்தில் இருகாலப் பகுதியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

குறிப்பு: காலமுறையில் கொள்வனவுக் கணக்குப் பேணப்படும் இம்முறையில் பௌதீகரீதியிலான இருப்புக் கணக்கெடுப்பு கால முடிவில் கட்டாயமாகிறதும்.

## 7.0 நிரைறவான இருப்புப் பதிவு முறை

## Perpetual Inventory System

வியாபார நிறுவனம் நிறைவான இருப்புப்பதிவு முறையை பயன்படுத்தும்போது பொதுப் பேரேட்டில் இருப்புத் தொடர்பான தனியான கணக்கைப் பேணும். அதில் இருப்புத்தொடர்பான சகல நடவடிக்கைகளையும் பதியும். அத்துடன் அதற்கு

உதவியாக விபரமான பதிவுகொண்டதாகிய இருப்ப அட்டைக ளும் பேணப்படும். ஒரு அட்டை ஒரு வகைப் பொருளுக்கு பயன்படுத்தப்படும். எல்லா இருப்பு அட்டை மீதிகளின் கூட்டுத் தொகை பொதுப்பேரேட்டிலுள்ள இருப்புத் தொடர்பான மீதிக் குச் சமமாகும்.

வியாபார இருப்பில் ஒவ்வொரு கொள்வனவினதும், ஒவ் வொரு விற்பனையினதும் பின்பு ஒழுங்காகப் பதிவு இடம்பெறும். உருப்படிகவின் கொள்வனவுக் கிரயம் நேரடியாக வியாபார இருப்பில் வரவு வைக்கப்படும். விற்பனையின்போது விற்ற சரக் கின் கொள்விலை வியாபார இருப்பில் செலவு வைக்கப்படும இதன்மூலம் அன்றாட இருப்பு தொடர்ச்சியாகப் பேணப்படும் அத்துடன் விற்பனைக்கிரயக் கணக்குப் பேணப்படுவதன் மூலம் காலப்பகுதிக்குரிய விற்பனைக் கிரயத் திரட்சியைக் கண்டுகொள் ளலாம. இம்முறையில் இறுதி இருப்பு சரிபார்க்கும் தேவைக்காக பௌதீகரீதியில் கணக்கெடுக்கப்படலாம்.

கடைசி உள் வெளி முறை பின்பற்றும்போது நிறைவான இருப்பு முறையுடன் கால இருப்பு மூறையை ஒப்பிட்டாக விற்ற சரக்கின் கிரயம் வேறுபட்ட தொகையாக அமைவதை அவதா னிக்கலாம். ஏனெனில் இறுதி இருப்பின் பெறுமதி வேறுபடுவ தனாலாகும்.

## 8.0 இருப்புக் கிரய மதிப்பீடு

### 8.1 *சில்லறை விற்பனை முறை.* Retail method

சில்லறை விற்பனை விலை முறையை உபயோகித்து இறுதி இருப்பின் பெறுமதியை மதிப்பிட விற்பனைக்குள்ள சரக்கின் கிரயம் கிரய விலையிலும், விற்பனைக்குள்ள சரசுகின் கிரயம் சில்லறை விற்பனையிலும் ஒப்பிடும் கிரய விகித அடிப்படை பின்பற்றப்படும். இபமுறை இடைக்கால அறிக்கைகளைத் திருப் திப்படுத்தும். இருந்தபோதும குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையாவது பௌதீக இருப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ள வேண்டும்.

### 8.2 *மொத்த இலாப முறை*

மொத்தலாப முறை சில்லறை விற்பனை விலை முறைக்கு ஒப்பானது, ஆனால் இதற்கு சில்லறை விற்பனை

விலைகளில் தொடக்க இருப்பு, கொள்வனவு, குறித்த விலை யிலேற்றம் பற்றிய தகவல்கள் தேவைப்படாது.

நிறுவனம் கட்டாயம் சாதரண மொத்தலாப எல்லையை அல்லது விகிதத்தை அறிந்திருக்க வேண்டும். காலத்திற்குக் காலம் மொத்தலாப விகிதம் மாறாது என்ற எடுகோள் பின் பற்றப்படுவதுடன் இம்முறையில் இறுதி இருப்புக் கணக்கெடுத் தல் அவசியமல்ல.

## முடிவுரை:

கணணி மயப்படுத்திய கணக்கியல் உலகில் செலவு குறைந்த முறையில் நிறைவான இருப்புப் பதிவுமுறை பின்பற்றப்படுவதா லும், நிதிக்கணக்கியலிலு, கிரயக்கணக்கியலிலும் இருப்புத் தொழிற்பாட்டு கணக்கீட்டுச் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெற்று வளர்ந்து வருவதை அண்மைக்கால கணக்கியல் வெளி யீடுகள் வெளிக்காட்டுவதாலும், இக்கட்டுரையில் இருப்புத் தொழிற்பாட்டுக் கணக்கீட்டின் சிறப்பம்சங்கள் சில எடுத்துரைக் கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெளிவான விளக்கம்பெற பின் வரும் பயிற்சிக் கணக்குகள் வழிகாட்டும்.

1 இந்திரன் கம்பனி 300 அலகுகள் இருப்பை ரூபா 450 பெறு மதியில் 31-12-1992ல் வைத்திருந்தது. அதன் 1993 கொள்வன வுகள் பின்வருமாறு

கொள்வனவு

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி 29 | 100 அலகு | ரூபா 1-70 | = 170-00 |
| யூன் 14 | 200 அலகு | ரூபா 2-00 | = 400-00 |
| ஆகஸ்ட் 4 | 100 அலகு | ரூபா 2-20 | = 220-00 |
| செப்ரெம்பர் 28 | 200 அலகு | ரூபா 2-50 | = 500-00 |
| டிசம்பர் 23 | 100 அலகு | ரூபா 2-60 | = 260-00 |
| மொத்தக் கொள்வனவு | 700 அலகு | | ரூ 1550-00 |

31-12-93ல் இருப்புக் கணக்கெடுத்தபோது 200 அலகு இருந்தது. பின்வரும் முறைகளில் இறுதியிருப்பின் பெறுமதியையும் விற்ப னைக் கிரயத்தையும் காண்க.

அ FIFO

ஆ LIFO

இ நிறையளித்த சராசரி முறை

விடைகள்

அ முதல் உள் முதல் வெளி
இறுதி இருப்பு ரூபா 510-00
விற்பனைக் கிரயம் ரூபா 1490-00

ஆ கடைசி உள் முதல் வெளி
இறுதி இருப்பு ரூபா 300-00
விற்பனைக் கிரயம் ரூபா 1700-00

இ நிறையளித்த சராசரிக் கிரயம்
இறுதி இருப்பு ரூபா 400-00
விற்பனைக் கிரயம் ரூபா 1600-00

ஒரு கம்பனி நிறைவான பொருட்பதிவேடு பேணுகிறது. அதன் கொள்வனவு விற்பனை பின்வருமாறு.

ஜனவரி 1 கொள்வனவு 100 அலகு அலகு ஒன்று ரூபா 10
பெப்ரவரி 5 கொள்வனவு 60 அலகு அலகு ஒன்று ரூபா 12
மார்ச் 16 விற்பனை 40 அலகு அலகு ஒன்று ரூபா 16
விற்பனை தொடர்பான பொதுக் குறிப்பேட்டுப் பதிவுகள்

அ LIFO முறையில்
ஆ LIFO முறையில்

விடைகள்

| | | | |
|---|---|---|---|
| அ | மார்ச் 16 காசு | 640-00 | |
| | விற்பனை | | 640-00 |
| | விற்பனைக் கிரயம் | 480-00 | |
| | வியாபார இருப்பு | | 480-00 |
| ஆ | காசு | 640-00 | |
| | விற்பனை | | 640-00 |
| | விற்பனைக் கிரயம் | 400-00 | |
| | வியாபார இருப்பு | | 400-00 |

3 லீலா களஞ்சியக் கணக்காளர் 31-12-86ல் தந்த தகவல்கள்

| | கிரயம் | சில்லறை விற்பனை விலை |
|---|---|---|
| இருப்பு 31-12-85 | 6500 | 11000 |
| தேறிய கொள்வனவு | 39000 | 58000 |
| மேலதிக குறித்தவிலை ஏற்றம் (Additional Markups) | | 1000 |
| குறித்த விலை இறக்கம் (Markdowns) | | 3000 |
| விற்பனை | | 6000 |

சில்லறை விற்பனை முறையில் லீலா களஞ்சிய இருப்பின் பெறு மதி காண்க?

| | கிரயம் | சில்லறை வி. விலை |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 6500 | 11000 |
| தேறிய கொள்வனவு | 39000 | 58000 |
| குறித்த விலை ஏற்றம் (Additional Markups | | 1000 |
| | 45500 | 70000 |

கிரய விகிதம் 40500 ÷ 7 000 = 65 %

| | |
|---|---|
| விற்பனை சில்லறை விலையில் | 60000 |
| குறித்த விலை இறக்கம் | 3000 |
| மொத்த விற்பனையும் குறித்த விலை இறக்கம் | 63000 |
| இறுதி இருப்பு சில்லறை விலையில் (70000-63000) | 7000 |
| இறுதி இருப்பு கொள்விலையில் (70000 × 65 % ) | = 4550 |

4 1988ல் கம்பனியில் கொள்வனவு

| | |
|---|---|
| கொள்வனவு | ரூபா 75000 |
| விற்பனை | ,, 120000 |
| கொள்வனவுத் திருப்பம் | ,, 4000 |
| விற்பனைத் திருப்பம் | ,, 8000 |
| ஆரம்ப இருப்பு | ,, 30000 |

தீயினால் இருப்பு முழுவதும் அழிந்தது
வரலாற்று மொத்தலாப வீதம் 40 %
தீயினால் அழிந்த சரக்கின் பெறுமதியைக் கணிக்குக?

விடை: தீயினால் அழித்த சரக்கின் கிரயம் ரூபா 31800

உசாத்துணை நூல்கள்:

1 *Financial Accounting — kermit D Larson William W Pyle3rd Edition*

2 *Spicer and Pegiers — Book kee ing and Accounte PAULGEE 19th Editio*

3 *Finanncial Accounding Australia Johu Hoggett, Lew Edwards 3rd Edition*

# விகிதப் பகுப்பாய்வு
# *RATIO ANALIYSIS*

க. தங்கராசா
*B. Sc (P.E.T; SP, Dip-in-E*
*யாழ்ப்பாணக் கல்லூரி*

ஒரு நிறுவனத்தின் நிதிச் செயற்பாடுகளை மதிப்பீடு
செய்வதற்காக நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் இருந்து விகி
தங்களைத் தயாரித்தல் விகிதப்பகுப்பாய்வு எனப்படும். விகிதம்
என்பது இரண்டு எண்களுக்கிடையே உள்ள தொடர்பைக் காட்டு
வதாகும்,

இலாபத்தை உச்சப்படுத்துவதற்கும், எதிர் காலத்தில்
திட்டம் இடுவதற்கும் பொறுப்பாக இருக்கின்ற உயர்மட்ட நிர்
வாகிகட்கு இவை பயன்படுகின்றன. கணக்கீட்டு விகிதம் மூலம்
நிதிக்கூற்றுகளுக்கு வியாக்கியானம் கொடுக்க முடியும். கடந்த
காலக் கணக்கீட்டு விகிதாசாரங்களுடன் நிகழ்காலக் கணக்கீட்டு
விகிதாசாரங்களை ஒப்பிட்டு நிறுவனத்தின் வினைத்திறன்
போக்கை அறிந்து கொள்ளலாம். இதேபோன்று ஒரே மாதிரி
வியாபாரம் செய்யும் இரு நிறுவனங்களின் விகிதங்களை ஒப்
பிட்டு குறிப்பிட்ட நிறுவனத்தின் வினைத்திறனை அறிந்து
கொள்ளலாம். வெளியாரைப் பொறுத்தவரை முதலீடு செய்ய
விரும்புகின்றவர்கள் கணக்கீட்டுவிகிதம் மூலம் எந்த நிறுவனத்
தில் முதலிட்டால் அதிக இலாபம் அடையலாம் என அறிந்து
கொள்ளலாம். ஒரு கடன்கொடுப்பவர் நிறுவனத்திற்கு கடன்
கொடுக்கலாமா இல்லையா? என அறிந்துகொள்ள இந்த விகிதங்
கள் உதவி புரிகின்றன.

கணக்கீட்டு விகிதங்கள் மீது அக்கறையுடையவர்கள்
வியாபார உடமையாளர்கள், முகாமையாளர்கள், எதிர்கால
முதலீட்டாளர்கள்' கடன்கொடுத்தோர் போன்றவர்கள் ஆவார்.

## கணக்கீட்டு விகிதங்களின் வகைகள்

### தொழிற்பாட்டு விகிதம் இலாபத்தன்மை விகிதம்

அ விற்பனையில் மொத்த இலாப விகிதம்

$$\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$$

ஆ விற்பனையில் தேறிய இலாப விகிதம்

$$\frac{\text{தேறிய இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$$

வியாபார நிறுவனத்தின் முழு வினைத்திறனையும் கணிப்பிடுவதற்கு இது ஒரு குறிகாட்டியாக அமைகின்றது. இந்த விகிதங்களுடன் அல்லது இதே போன்ற வியாபாரம் செய்யும் நிறுவனங்களுடன் ஒப்பீடு செய்து எதிர்காலத்தில் இலாபத்தை அதிகரிப்பதற்கு திட்டமிடலாம்.

இ உழைப்பு இலாப விகிதம் அல்லது ஈடுபடுத்திய மூலதனத்திற்கு சதவீதமாகத் தேறிய இலாப விகிதம்

1

$$\frac{\text{தேறிய இலாபம்}}{\text{ஈடுபடுத்திய மூலதனம்}} \times 100$$

இதன் மூலம் போடப்பட்ட மூலதனம் எவ்வளவு தூரம் இலாபம் உழைத்து தருகின்றது என்பதை அறியலாம்.

2

$$\frac{\text{தேறிய இலாபம் (வரிக்குப் பின்)}}{\text{நிலையான மாற்றம் சொத்துக்கள்} + \text{தொழிற்படு மூலதனம்}} \times 100$$

3 உற்பத்தி விகிதங்கள் (இலாபத்தன்மை விகிதங்கள்)

1 தொழிற்சாலைச் செலவு விற்பனைக்கு

2 நிர்வாகச் செலவு விற்பனைக்கு
3 விநியோக செலவு விற்பனைக்கு
4 ஆராய்ச்சி அபிவிருத்திச் செலவு விற்பனைக்கு
5 உற்பத்தி மேந்தலை செலவு விற்பனைக்கு
6 மூலப்பொருட் செலவு விற்பனைக்கு

ஏ விற்பனைக்கு அறவிடமுடியாக் கடன் விகிதம்

$$\frac{\text{அறவிடமுடியாக்கடன்}}{\text{விற்பனை}} \times 100$$

கடனை திருப்பித் தரக்கூடிய வாடிக்கையாளர்களுக்கு விற்பனைகள் செய்யப்படுகின்றதா? என்பதை இவ்விகிதம் காட்டும். விகிதம் அதிகமாகயிருக்குமாயின் திறமையான கட்டுப பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என்பதைக் காட்டும் புதிய மேலதிகமான வாடிக்கையாளர்களின் கடன் தரும் தன்மையைச் சோதிப்பதன் மூலம் அவர்கள் கைநழுவிப் போவதற்கு முன் கடன்களை சேகரித்துக் கொள்ளலாம்,

உ உபயோகிக்கப்பட்ட மூலதனத்திற்கு
விற்பனை விகிதம்

$$\frac{\text{விற்பனை}}{\text{உபயோகிக்கப்பட்ட மூலதனம்}}$$

இந்த விகிதமானது ஒரு வியாபாரத்திலே ஈடுபடுத்திய மூலதனத்திற்கான புரள்வுகளைத் காட்டுகின்றது ஒரு உயர்ந்த விகிதமானது ஒரு நல்ல அறிகுறியாகும். அதிக தடவை மூல தனம் விற்பனையாக மாறியிருக்கின்றது எனலாம். இதனால் அதிக இலாபம் உழைக்கச் சந்தர்ப்பம் உண்டு. தாழ்ந்த விகி தத்தில் மூலதனம் பயன்படுத்தப்படாதிருக்கும் விளைவுகளை காட்டும்,

ஊ புரள்வு விகிதம் STOCK TURN OVER

$$\frac{\text{விற்ற சரக்கின் கொள்விலை}}{\text{சராசரிக் கையிருப்பு}} \times 100$$

வருடாந்தம் சரக்கிருப்பு என்ன வேகத்தில் விற்பனை யாகின்றது என அறிந்து கொள்ளலாம். அதாவது சரக்கினது சுழலும் வேகத்தை இதன் மூலம் அறியலாம். வருடத்தில் எத்தனை தடவைகள் உற்பத்தி செய்கின்றதோ அதற்கேற்ப இலாபம் அதிகரிக்கும்.

எ $\dfrac{\text{விற்பனை}}{\text{நடைமுறை சொத்துக்கள்}}$

ஏ $\dfrac{\text{விற்பனை}}{\text{நிலையான சொத்துக்கள்}}$

ஐ $\dfrac{\text{விற்பனை}}{\text{இருப்பு}}$

## 4 திரவத்தன்மை விகிதம் / கடன் தீர்க்கும் விகிதம் SOLVENCY & LIQUIDITY RATIO

### அ நடைமுறை (தொழில்படுமுதல்) விகிதம் CURRENT RATIO

$\dfrac{\text{நடைமுறைச் சொத்துக்கள்}}{\text{நடைமுறைப் பொறுப்புக்கள்}}$

நிரந்தர சொத்துக்களைப் பராமரிப்பதற்கும், நடைமுறைச் செலவுகளைச் சமாளிப்பதற்கும் போதியளவான தொழிற்படு முதல் இருக்கின்றதா? என்பதை இது காட்டும் நடைமுறைச் சொத்துக்கள் செலுத்திலும் பார்க்க கூட இருப்பது விரும்பத்தக்கது, ஆகவே நடைமுறை விகிதம் 2 : 1 ஆக இருப்பது நல்லது. 1 : 1 இருந்தால் பாதகமில்லை. 1 : 2 ஆக இருந்தால் பாதகமாக அமையும். அதாவது நடைமுறைச் செலவுகளைச் சமாளிக்க கஸ்டமாக இருக்கும். கடன்காரர் கடன்களை கேட்டவுடன் கொடுக்க முடியாத ஒரு நிலை ஏற்படும். தொழிற்படுமுதல் நல்ல நிலையில் இருப்பது பின்வரும் காரணிகளில் தங்கியின்னது.

விற்பனைக்குள்ள பொருட்கள் மீது மக்களுக்குள்ள விருப்பும் சுவையும்

வாடிக்கையாளர்களுடனும், வழங்குனர்களுடனுமுள்ள கொடுக்கல் வாங்கல் முறைகள்

3 வங்கி மேலதிகப் பற்று வசதி
4 முதலீடு செய்யும் பணம் வருவாயாக மாறும் காலம்
5 பொருளின் தரம்

### மேலதிக வியாபாரம்

விற்பனை குறைந்தால் பொருள் குவிந்து அன்றாடம் செலவுகளைச் சமாளிக்க முடியாத நிலை

### அடையாளம் காணல்

1 கடன் கொடுனர்கள் கூட, கடன்படுநர் குறைவு
2 இருப்புக் கூட, கையில் காசு குறைவு
3 மொத்த இலாபமும், தேறிய இலாபமும் அல்லது தேறிய இலாபம் குறைவடைதல்
4 நிரந்தர சொத்துக்களில் அதிக பணம் ஈடுபடுத்தப்படுத்தப் படுதல்
5 நிரந்தர சொத்து மீது பராமரிப்புச் செலவு அதிகளவு

## ஆ திரவ விகிதம்/விரைவுச் சொத்து விகிதம் உரைக்கல்/சோதனை விகிதம்

## LIQUIED/QUICK/ACID RATIO

$$\frac{\text{நடைமுறைச் சொத்துக்கள் — இருப்பு}}{\text{நடைமுறைப் பொறுப்புக்கள்}}$$

நிறுவனக் கடன் கொடுத்தோருக்கு பணத்தை கொடுக்கக் கூடிய முறையில் திரவத்தன்மையான வளங்களைக் கொண்டிருக்கின்றதா என்பதை இந்த விகிதம் மூலம் அறிந்து கொள்ளலாம் திரவ விகிதம் 1 ; 1 ஆக இருப்பது நன்று. 1 ; 2 ஆக இருந்தால் கடன்கொடுத்தோர்கள் பணத்தைக் கேட்டவுடன் கொடுக்கக்கூடியதாக இருக்கும். 2 ; 1ஆக இருந்தால் கேட்டவுடன் பணத்தைக் கொடுக்க முடியாது. இந்த விகிதம் உண்மை நிலையை நிறுவனத்தில் எடுத்துக்காட்டும்.

## இ கடனாளிகள் சுழல் மாற்று விகிதம் / கடன் சேர்ப்பு காலம்

$$\frac{\text{இறுதிக் கடனாளிகள்}}{\text{மொ. கடன் விற்பனை}} \times 365/52 \text{ வாரம்}/12 \text{ மாதம்}$$

ஈ கடன் கொடுத்தோர் கழல் மாற்று வீகிதம் / கடன் கொடுத்தோர் காலம்

$$\frac{\text{இறுதிக் கடன்கொடுத்தோர்}}{\text{மொ. கடன்கொடுத்தோர்.}} + 365/52\text{வாரம்}/12\text{மாத}$$

உ இருப்புச் சராசரி வீகிதம்

$$\frac{\text{விற்ற சரக்கின் கொள்விலை}}{\text{சராசரியிருப்பு}}$$

நீண்டகால திரவத்தன்மை விகிதம்

## LONG TERM LIQUID RATIO

அ மூலதன இணைப்பு வீகிதம்

## CAPITAL GEARING RATIO

ஒரு கம்பனியிலுள்ள சாதாரண பங்கு முதலுக்கும் நிலையான வட்டியைப் பெறுகின்ற தொகுதிக்கடன், முன்னுரிமைப் பங்கு முதல் என்பவற்றிற்கு இடையே உள்ள தொடர்பை வெளிப்படுத்துவது மூலதன இணைவு விகிதம் ஆகும். இங்கு சாதாரண பங்குமுதல் எனும்போது சில கம்பனிகள் சாதாரண பங்குகட்கு கூடிய ஒதுக்கங்களையும் சேர்த்துக்கொள்கின்றன.

$$\frac{\text{நிலையான வட்டிக் கடனும், முன்னுரிமைப் பங்கு முதல்}}{\text{சாதாரண பங்கு முதல்}}$$

1 ஒரு கம்பனியில் நிலையான வட்டி பெறுகின்ற கடனும் முன்னுரிமைப்பங்கு முதலும், சாதாரண பங்கு முதலை விட அதிகமாக இருப்பின் அது உயர் மூலதன இணைவு ஆகும்.

2 நிலையான வட்டிக்கடன், முன்னுரிமைப் பங்கு என்பதைவிடச் சாதாரணபங்கு அதிகமாக இருப்பின் அது தாழ் மூலதன இணைவு ஆகும்.

3 நிலையான வட்டிக்கடன், முன்னுரிமைப்பங்கு முதல் என்பனவும், சாதாரண பங்கு முதலும் சமமாக இருப்பின் சமமூலதன இணைவு ஆகும்.

ஒரு கம்பனியில் உயர் மூலதன இணைவு இருக்குமாயின் முன்னுரிமைப் பங்குதாரருக்கும், தொகுதிக் கடன்காரருக்கும் அதிகவட்டி கொடுக்கவேண்டி வரும். சாதாரண பங்குதாரருக்கு ஒரு குறிப்பிட்ட பங்குதாரருக்கு ஒரு குறிப்பிட்ட வீதமில்லாது மாற்றம் உடையதாக இருக்கும். உண்மையில் கம்பனியின் இலாபத்தில் அதிக வீழ்ச்சி ஏற்பட்டால் சாதாரண பங்குதாரருக்கு இலாபம் இல்லாது போய்விடும். மேலும் மூலதன இணைவு உயர்வாக இருக்கும் நேரத்தில் சாதாரண பங்குதாரருக்கு இலாபவீதம் மாறுவது மட்டுமன்றி முன்னுரிமைப் பங்குதாரருக்கும், தொகுதிக் கடன்காரர்களுக்கும் அவர்களின் மூலதனத்தின் மீதான பாதுகாப்பையும், வருமானத்தையும் ஈட்டுவதற்கு அதிக வருவாய் வழங்கப்படும். ஏனெனில் உயர் மூலதன இணைப்பில் சாதாரண பங்குதாரர் குறைவு. ஆகவே நட்டங்களைப் பொறுப்பேற்க வேண்டியவர்களும் குறைவே.

அடுத்துத் தாழ் மூலதன இணைப்பால் கம்பனி உழைக்கும் இலாபத்திற்கு ஏற்ப சாதாரண பங்குதாரருக்கு சேரவேண்டிய பங்குலாபத்தில் அதிகளவு மாற்றம் இருக்கமாட்டாது. அதேசமயம் முன்னுரிமை பங்குதாரருக்கும், தொகுதிக் கடன்காரருக்கும் அதிக பாதுகாப்பை அனுபவிப்பர்.

ஆ உபயோகிக்கப்பட்ட மூலதனத்திற்கு நிரந்தர சொத்துக்களின் விகிதம்

$$\frac{\text{நிரந்தர சொத்துக்கள்}}{\text{ஈடுபடுத்திய மூலதனம்}}$$

உருவச் சொத்துக்கள் கணக்கில் எடுக்கப்பட்டு அருவ சொத்துக்கள் புறக்கணிப்புச் செய்யப்படும்.

நிரந்தர சொத்துக்கள் கூடவா? அல்லது குறைவா? என இது காட்டும் நிரந்தர சொத்துக்கள் அதிகரிக்கபபடக் கூடாது அவற்றை பராமரிப்பது கஸ்டம் நிலையான சொத்துக்கள் அதிகரித்தால் தொழிற்படு மூலதனம் குறையும் நிரந்தர சொத்துக்களின் அளவைக் கடந்த காலத்துடன் ஒப்பிட்டு அல்லது இதேவியாபாரத்துடன் ஒப்பிட்டு நிர்ணயிக்கலாம்

இ $$\text{கடன் முதல்} = \frac{\text{நீண்டகாலக்கடன் நடைமுறைப் பொறுப்பு}}{\text{மொத்த சொத்துக்கள்}}$$

சொத்துக்கள்

ஈ வட்டிப் பாதுகாப்பு விகிதம் = $\frac{\text{வரிக்கு முன் இலாபம்}}{\text{காலப்பகுதிக்கான வட்டி}}$

4 கடன் தீர்க்கும் தன்மை/ உறுதித்தன்மை விகிதம்
SOLVENCY STABILITY RATIO

அ பங்குதாரரின் நிதிக்கு மொத்தக்கடன் விகிதம்

$\frac{\text{மொத்த வெளிக்கடன்}}{\text{பங்குதாரர் நிதி}}$

இந்த விகிதமானது வியாபார நிறுவனம் கடன்களைச் செலுத்தக்கூடிய நிலையில் உள்ளதா? என்பதை வெளிப்படுத்தும் அத்துடன் வெளிக்கடன்காரருக்கும் பாதுகாப்பு இருக்கின்றதா? என்பதையும் காட்டுகின்றது ஆகவே இது நிதியின் உறுதித்தன்மையைக் காட்டுகின்றது

ஆ பங்குதாரர் நிதிக்கு நீண்டகாலக் கடன் விகிதம்

$\frac{\text{நிரந்தர வெளிக்கடன்கள்}}{\text{பங்குதாரர்கள் நிதிகள்}}$

இந்த விகிதம் நீண்டகாலக் கடன்காரருக்குப் பாதுகாப்பு (கடன் திரும்பக் கிடைத்தல்) இருக்கிறதா? என்பதைக் காட்டும் இங்கு நீண்டகால கடன்கள் என்னும் போது கடன்கள் தனிச்சம் (தொகுதிக்கடன்கள்) என்பன அடங்கும்.

இ உரிமை விகிதம் EQUITY RATIO

$\frac{\text{பங்குதாரர் நிதிகள்}}{\text{மொ சொத்துக்கள் (உருவமுள்ளவை)}}$

கம்பனி தனதுகளைக்கப்படுகின்ற காலத்தில் பாதுகாப்பளிக்கப்படாத (பிணை வழங்கப்படாத) கடன்கொடுத்தோர் நட்டங்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கக்கூடிய நிலையில் இருக்கின்றார்களா என்பதைக் காட்டும்

5 இருப்பு விகிதம்

இந்த விகிதங்கள் மூலப்பொருள், புத்துருவாகும் வேலை, முடிவும் பொருள் இருப்பு என்பவற்றில் இருப்புக்கட்டுப்பாட்டின்

வல்லமையை வெளிப்படுத்துகின்றது. இதன் மூலம் மேலதிகமான இருப்புக்கள் தவிர்க்கப்படுகின்றன. அதன் மீது செய்யப்பட வேண்டிய களஞ்சியப்படுத்தல், நட்டஈடு போன்ற செலவுகள் தவிர்க்கப்படுகின்றன.

அ மூலப் பொருள் இருப்புக் கொள்வனவுக்கு.

இது மூலப் பொருள் மாறும் வேகத்தைக் காட்டுகின்றது.

ஆ புத்துருவாகும் வேலை உற்பத்திக்கு,

இது உற்பத்தி வட்டத்தின் போக்கை காட்டுகின்றது.

இ முடிவுப் பொருள் மொத்த விற்பனைக்கு

முடிவுப்பொருள் விற்பனை செய்யப்படுவதற்கு முன்னர் கொள்வனவு காலம் வியாபாரத்தில் வைத்திருக்கப்படுகின்றது என்பதனை இந்த விகிதம் காட்டும் இலாபத்தினை அதிகப்படுத்துவதற்காக எவ்வளவு குறுகிய காலம் வைத்திருக்க முடியுமோ அவ்வளவு குறுகிய காலம் வைத்திருக்க முடியும்.

ஈ வருவாய் அல்லது முதலீட்டு விகிதம்

இந்த விகிதங்கள் மூலதன விகிதத்துடன் நெருங்கிய தொடர்பு உடையன இது பங்குகளின் வருவாயுடன் சம்பந்தப்பட்டது இந்த விகிதங்கள் பெறுமதியான தகவல்களைப் பங்குதாரருக்கும், நிதி முகாமையாளர்களுக்கும் புலப்படுத்துகின்றன எதிர்கால முதலீட்டு வட்டியினை அறிவதற்கு இந்த விகிதங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது.

# பெருந்தோட்டத்துறையின் முகாமைத்துவ மாற்றம் பற்றிய ஒரு நோக்கு

## AN OVERVIEW OF THE CHANGE IN THE MANAGEMENT OF THE PLANTATION SECTCR

செ. அ. தேவச்சந்திரன் (ஆசிரியர்)
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்பாடசாலை
பருத்தித்துறை

இலங்கையில் பொருளாதார உயிர்நாடியாக விளங்கும் பெருந்தோட்டத்துறை பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் தீவிரமாக விருத்தியடைந்து நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும்பங்கை ஈட்டித்தரும் துறையாக மாறியது. இதன் விருத்தி காரணமாக நாட்டின் பொருளாதாரம் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரமாக மாறியது. 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோப்பிப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பிரித்தானிய தனியாரும் பிரித்தானிய தனியார் கம்பனிகளும் பெருந்தோட்டத் துறையில் முதலிட்டனர். மலைநாட்டு பெருந் தோட்டத் துறைக்கான காணிகளைப் பெற்றுக்கொள்ள இலங்கையில் ஆட்சி செய்த பிரித்தானிய ஆளுநர்கள் காணிச்சட்டங்களை இலகுவாக்கி உதவி செய்தனர். இதன் விளைவாக மலைநாட்டில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த கிராமிய மக்கள் தமது காணிகளையும் விவசாயத் தொழிலையும் இழந்து பெரும் நிர்க்கதிக்குள்ளாகினர்.

பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் விருத்திக்கு இலங்கையில் ஆட்சி செய்த பிரித்தானிய ஆட்சியாளர் கொழும்பிலிருந்து மலைநாட்டிற்கு பெருந்தெருக்கள், புகையிரதப்பாதைகள், தொலைத் தொடர்பு, தபால் தந்தி, வங்கிகள் போன்ற

வசதிகளை ஏற்படுத்தி' ஊக்கமளித்தனர். அதிக இலாபம் ஈட்டிக் கொடுத்த பெருந்தோட்டத் தொழிலில் ஈடுபட பலர் முன் வந்ததோடு காலப்போக்கில் இலங்கை செல்வந்தர்களும் இலங்கை தனியார் கம்பனிகளும் இதில் ஈடுபட முன்வந்ததில் வியப்பில்லை.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கோப்பிப்பயிர் நோய்க் கிலக்காகி அழிந்தபின் (1870 அளவில்) தேயிலைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. தேயிலைத் தோட்டத் தொழிலாளர் தேவையைத் தீர்க்கும் நோக்கிற்காக தென் இந்தியாவிலிருந்து குறைவான ஊதியத்துடன் தொழில் புரியும் இந்தியர் மலைநாட்டில் குடியேற்றப்பட்டனர், இதுவும் பெருந்தோட்ட முதலாளிகளுக்கு மேலும் ஊக்குவிப்பாக அமைந்தது. (இலங்கை சுதந்திரமடைந்ததும் இந்தியா பிரஜா உரிமைப் பிரச்சனை இவர்களைத் திருப்பி அனுப்பும் பிரச்சனை போன்றவற்றை இலங்கை அரசு எதிர்நோக்க வேண்டி இருந்தது.) வெளிநாட்டுத் தனியாரும் தனியார் கம்பனிகளும் அதிக இலாபம் பெற்று இலங்கைக்குச் சேர வேண்டிய பணத்தை எடுத்துச் செல்கிறனர் என்ற குற்றசாட்டு எழுந்தது. இதனால் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து பெருந்தோட்டத்துறை அரசுடமையாககப்படவேண்டும் என்ற குரல் எழுப்பப்பட்டு வந்தது.

இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் ஏறத்தாழ 95% வீதம் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள் ஏற்றுமதி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது அரசாங்கம் இப் பயிர்கட்குரிய காணி உரிமையாளர்கள் புனர் நடுகை செய்வதற்கு, சிறந்த இனப் பயிரினங்களை நடுவதற்கு, பயிர் நோய்களைக் கட்டுப்படுத்த, வளமாக்கி பயன்படுத்தப் பல உதவித் திட்டங்களை வகுத்து உதவி வந்தது. தனியார் கம்பனிகளும இலாப நோக்குடன் பெருந்தோட்டங்களை நிர்வகித்து வந்தனர் பெருந்தோட்ட உரிமையாளரோ அல்லது அவர்களது பிரதிநிதிகளோ எல்லா நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்து வந்தனர். 1972 களை அடுத்து காணிச் சீர்திருத்தச் சட்டம் மூலம் பெருந்தோட்டங்களை அரசு தேசியமயமாக்கியது 'ஜனவசம', 'உசவசம' போன்ற நிறுவனங்கள் பெருந்தோட்டங்களை நிர்வகித்து வந்தன இவற்றின் நிர்வாகத்தின்போது இலாபநோக்கு முன்னணியிலிருக்கவில்லை. ஊழியர் யாவரும் அரச ஊழியர் என்ற வகையிற் தொழிற்பட்டனர். புனர் நடுகை மீள் நடுகை, வளமாக்கிப் பாவனை போன்றவற்றிற் கூடிய கவனம் செலுத்தத் தவறினர் இவற்றால் 1956ல் மொத்த ஏற்றுமதி

வருவாயில் பெருந்தோட்டத்துறை 72% ஐ பெற்றிருந்து. தற்போது 50%ற்கு குறைந்ததுடன் நட்டம் எய்திய காணிகளை கைவிட்டனர். தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்த போதிலும் உலக சந்தையிற் தேயிலை விலை அதிகரித்து வந்ததால் உற்பத்தியில் ஏற்பட்ட நட்டங்களை ஓரளவிற்கு ஈடுசெய்ய முடிந்தது காலப்போக்கில் பெருந்தோட்டங்களின் நிர்வாகச் செலவு அதிகரித்து வந்ததோடு இறப்பர் உற்பத்தியிலும் தெங்குப் பொருள் உற்பத்தியிலும் ஏற்பட்ட வீழ்ச்சியினால் அரசினாற் பொறுக்க வேண்டிய செலவு காலப்போக்கில் அதிகரித்துச் சென்றது. இதனால் 1992 நடுப்பகுதியில் இலங்கையிலுள்ள பெருந்தோட்ட முகாமைத்துவம் இலங்கையைச் சேர்ந்த 22 தனியார் கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்கம்பனிகள் தோட்டங்களைத் திறம்பட நிர்வகித்து உழைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியை அரசிற்கு வழங்கவேண்டும என்ற நிபந்தனைக்கமைய செயற்பட்டு வருகின்றன. ஆனால் பெருந்தோட்டங்கள் தொடர்ந்தும் அரசுடமையாகவே இருந்து வரும் என்றும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகிறது இவ்வாறு ஏறத்தாழ 20 வருடங்களில் அரசுடமையாக்கப்பட்ட பெருந்தோட்ட துறையானது தொடர்ந்தும் மரபு வழி முறைகளை எவ்வித நவீனமயப்படுத்தலுக்கும் உட்படுத்தாது பின்பற்றி வந்தாலும் உற்பத்தியினைப் பதனிட பல தொழிற்சாலைகளைக் கொண்டிருந்தாலும் உதாரணமாகத் தேயிலைக்கு மட்டும் 720 தொழிற்சாலைகள் காணப்பட்டன. அவற்றின் நிர்வாகத்தை ஒருங்கிணைப்பதிற் சிரமங்களை எதிர்நோக்கியமையுமே மீண்டும் நிர்வாகத்தை தனியார் மயபடுத்த முன்வந்ததற்கு காரணங்களாகும்

தற்போதைய இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் தைத்த ஆடைகள் பெரும் பங்கை வகித்தாலும் முடிவுப் பொருள் ஆக்கத்திற்கு வேண்டிய மூலப் பொருளாக ஏற்றுமதி செய்பவற்றில் பெருந்தோட்டப் பொருட்களேமுன்னணியிற் காணப்படுகிறது. மேலும் தொழில்வாய்ப்பைப் பொறுத்த வரையில் பெருந்தோட்டத் துறையிலேயே அதிகளவு தொழிலாலர் தொழில் புரிகிறார்கள், இங்கு ஏறத்தாழ 6—7 இலட்சம் ஊழியர்கள் காணப்படுகின்றனர். இந்தளவு எண்ணிக்கையானோருக்கு தொழில் வாய்ப்பு வழங்குமளவிற்கு இதுவரையில் வேறு எத்தத் துறையும் இலங்கையில் முன்னேறவில்லை என்று கூறலாம். மேலும் இலங்கையின் மொத்த வேளாண்மை நிலப்பரப்பில் அதிகளவைப் பெருந்தோட்டப் பயிர் வேளாண்மையே கொண்டுள்ளது. எனவே பொருளாதார வேலை வாய்ப்பு ரீதியிலும் மொத்த பயிரிடும் நிலப்பரப்பு ரீதியிலும் முதலிடம் பெறுவது பெருந்தோட்டத் துறையேயாகும்,

அரசானது பெருந்தோட்டத்துறையின் நிதிச்செயற்பா டுகளைக் கவனிக்க ஒரு அங்கீகாரம் பெற்ற குழுவை நியமித்தி ருப்பது போல் ஏனைய மீள்நடுகை புனர் நடுகை, வளமாக்கிப் பாவனை போன்ற பல்வேறு செயற்பாடுகளை கவனிக்கவும் வெவ்வேறு குழுக்களை அரசு அமைக்குமாயின் முற்கூறப்பட்ட நட்டநிலைகள் போன்ற விரும்பத்தகாதவற்றை நீக்கிக் கொள்ள முடியும். இக் குழு அமைப்பானது முகாமை தனியார் மயப்படுத் தலினால் அவசியமாகக் காணப்படுகிறது. காரணம் தனியாரின் நோக்கம் வர்த்தக ரீதியின் உச்ச இலாபம் பெறுவதாகும் இதற் காக ஊழியரை சுரண்டல் போன்றன ஏற்படலாம் எனவே அதைத் தடுக்க அரசு முனையும வழியாக இக் குழுக்கள் அமை ப்பது காணப்பட வேண்டும். முகாமையானது தனியார் மயப்படு த்தும் போது அங்கு இலாப நோக்கம் காணப்படுவது அவசியம் அவ்வறில்லாவிடின் தனியார் எவரும் முன்வரமாட்டார்கள் அதற் காக ஏற்றுக்கொள்ளும் தனியார் அமைப்புகள் சமூகப் பொறுப் பையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். இலங்கை யின் மீள நிரப்பமுடியாத செல்வ வளமாகிய பெருந்தோட்டத் துறையானது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓரளவு பராமரிப்பு முறை களை கொண்டதாகக் காணப்படல் வேண்டும்.

தனியார் மயப்படுவதென்பது முகாமையானது தனியார் அமைப்புகளால் நடாத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் இதனால் இங்கு ஊழியருக்கு மேலதிக வசதிகள் போன்ற ஊக்குவிப்புகள் கிடைக்கின்றன இதனால் முன்பு அரச ஊழிய ராக செயற்பட்டவர் தற்போது தனது செயற்பாடுகளை வினை த்திறன் கூடியதாக்குவதோடு மேலதிக ஊக்கத்தோடு புதிய புதிய நுட்பங்களைப் பின்பற்றி செயற்பட வைக்கும். அரசானது முகா மையை தனியார்மயப்படுத்தியதற்கு முக்கிய காரணமாக வருட வருடம் மிகமோசமாக பாதிக்கப்பட்டு வந்த ஜனதா தோட்ட அபிவிருத்திசபையை முறிவடையாதுபேண மாதாந்தம் 500 மில்லி யன் ரூபாயை அரசு உதவிப்பணமாக வழங்கிவந்தது. இது கால ப்போக்கில் அதிகரிக்கத் தொடங்கியதோடு ஏனைய சபைகளும் இவ் உதவியை நாட முற்பட்டமையைக் குறிப்பிடலாம்

ஒரு அமைச்சர் எவ்வாறு தனது துறை சார்ந்தோரின் வாக்குரிமையைப்பெற முயற்சித்து வசதிகள் செய்து கொடுப் பாரோ அதேபோல தனியார் அமைப்புக்கள் ஒவ்வொன்றினதும் நிறைவேற்றுத் தரத்திலுள்ள பணிப்பாளர் தமது ஊழியருக்கு வேண்டிய வசதியினை மேலதிகமாகவேனும் செய்து கொடுப்பத னூடாக அவர்களை ஊக்குவித்து வினைத்திறனை எவ்வளவு

உச்சப்படுத்திப் பெறலாமோ அவ்வாறு பெற முயற்சிப்பர். இது பெருந்தோட்டத் துறையிலுள்ள அமைப்புக்களில் மட்டுமன்றி ஏனைய எத்துறையிலுள்ள அமைப்பிலும் காணப்படுவதொன்றாகும். இவ்வாறு முன்னணியிலுள்ள தனியார் கம்பனிகளின் நிதி நிலைகளை அதாவது அவற்றால் உழைக்கும் ஒவ்வொரு சதத்தையும் மதிப்பீடு செய்ய வேண்டியது மறுபுறம் அவசியமானதாகிறது. இவ்வாறான ஒவ்வொரு சத உழைப்புமே எதிர்காலத்தில் அவற்றின் தராதரத்தை நிர்ணயிப்பனவாகின்றது.

நிர்வாகமானது தனியார் மயப்படுவதால் பின்வரும் சில பக்க விளைவுகளும் நோக்கப்படவேண்டியது அவசியமாகிறது. அதாவது இலாப நோக்கமே முதலிடம் பெறுவதால் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுவதிற் தவற முற்படலாம். சமூகப் பொறுப்பு எனும்போது சூழலை மாசுபடுத்தும் வகையில் தொழிற்சாலைக் கழிவுகளை அகற்றுதல் மேலும் வேளாண்மை நிலத்தின் இயற்கை வளத்தை குன்றவிடாது உரிய உரிய நேரங்களில் வளமாக்கி போன்றவற்றைப் பயன்படுத்தி அதை உரிய நிலையிற் பேணுலதில் அக்கறை காட்டாதிருத்தல் இவற்றை மதிப்பாய்வு செய்யவும் அரசிற்கும், நிலவுடமையாளருக்கும், நடாத்தும் தனியார் அமைப்புகட்குமிடையே தொடர்புகளைப் பேண ஒவ்வொரு குழுக்களை அரச கண்காணிப்பில் நியமித்து செயற்படுத்தவேண்டியது அவசியமாகிறது இவ்வகையில் ஏற்கனவே நிதிச்செயற்பாடுகளை கண்காணிக்க பெருந்தோட்டத் துறைக்கென ஒரு குழு செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

நிர்வாகமானது அரசுடமையாயிருப்பதிலும் தனியார் மயப்படுத்தல் அல்லது மக்கள் மயப்படுத்தல் மிக மிகச் சிறப்பானதாகும். உதாரணமாக இலங்கைப் போக்குவரத்துச் சபையாயானது இதுவரைகாலமும் அரசுடையாயிருந்து மிக அண்மையில் ஒவ்வொரு பிராந்திய அலுவலகமும் மக்கள் மயப்படுத்தப்பட்டு வருவதால் அங்கு தொழில் புரியும் ஒவ்வொரு ஊழியரும் பங்குதாரராக்கப்படுவதால் முழு முயற்சியுடன் ஊக்கப்படுத்தப்பட்டு செயற்படுவதால் பல கோடி ரூபா நட்டத்தில் இயங்கிவந்த போக்குவரத்துச் சபையானது தற்போது முற்றிலும் மாறி இலாபத்தில் செயற்பட்டு அவ் இலாபம் மறு முதலீடாக புதிய பேருந்துகளை வாங்கப் பயன்படுத்தப்படுவதால் மேலும் மேலும் இலாபத்துடன் சிறந்த சேவையை வழங்க முடிகிறது. அவ்வகையில் பெருந்தோட்டதுறையின் நிர்வாகத்தையும் தனியார் மயப்படுத்தியமை அத்துறையை இலாபத்துடன் செயற்படுத்த வைப்பதோடு மொத்த தேசிய வருமானம், ஊழியம் என்பவற்றிலும் கூடியபங்கை வகிக்க உதவும் எனக் கூறமுடிகிறது.

# தற்சமனாக்கும் முறை

நா வரதராசா
திட்டமிடல் அலுவலர்

## தற்சமனாக்கும் முறை தொடர்பான எண்ணக்கரு

பேரேட்டுக்கணக்குகள் அதிகம் காணப்படாதசிறிய நிறுவனங்களில் கணக்கீட்டுக் காலப்பகுதியின்முடிவில் தயாரிக்கப்படும் பரீட்சைநிலுவை சமப்படாதவிடத்து பெரியபிரச்சனை உருவாகுவதில்லை சிறிய எண்ணிக்கையில் உள்ளபேரேட்டுக்கணக்குகளை மீண்டும் பார்வையிடுவதற்கு அதிகநேரம் எடுக்காது. எனவே வேறுபாட்டிற்கான காரணங்கள் கண்டறியப்படலாம ஆனால் பெரிய தொழில் முயற்சி நிறுவனங்களில் அவ்வாறான நிலை ஏற்படும்போது வழுக்களைக் கண்டுபிடிப்பது கடினமானது. பரீட்சை மீதியில் ஏற்படும் வித்தியாசம் சிலசமயங்களில் ஒன்றை ஒன்று ஈடாக்கும் வழுக்களிலும் ஏற்படும். எனவே வழு ஏற்படும் இடத்தின் அதிககால விரயம இன்றிக் கண்டறிவதற்கு தற்சமனாக்கும் முறை பயன்படுத்தப்படுகின்றது.

## பேரேடுகளின் உபபிரிவுகள்

வழுக்களைச் சுட்டிக் கண்டறிவதற்கு தற்சமனாக்கும் முறை பயன்படுகின்றது. தற்சமனாக்க முறையின் செயறபாட்டினை பூரணமாக விளங்கிக் கொள்வதற்கு கணக்கீட்டு வடிவமைப்புப் பற்றிய அறிவு அவசியமாகும். கணக்கீட்டின் வடிவம் மூன்று படிவ நிலைகளில் பாகுபடுத்தப்படலாம.
1) இணைநிலை ஏடுகளில் பதிதல் 2) துணை ஏடுகளில் இருந்து பேரேடுகளுக்குப் பதிவு செய்தல் 3) முடிவுக் கணக்குகளைத் தயாரித்தல் தற்சமனாக்கும் முறையானது 4ம் படிநிலையில் அறிமுகம் செய்யப்படுகினறது. தற்சமனாக்கும் முறையில் ஒரு நடவடிக்கைக்கான பதிவு ஒரு பேரேட்டிற்கு மாத்திரம் வரையறுக்கப்படாததாக உள்ளது. அப்பதிவுகள் ஒன்றுக்கு மேற்பட்ட பேரேட்டில் பதிவு செய்யப்படுகின்றது.

## பேரேடுகளின் நோக்கம்

நிறுவனத்தின் முயற்சி வளர்ந்து கொண்டு செல்லும் போது கணக்குகள் ஒன்றுக்கு மேற்பட்ட பேரேடுகளில் வைக்கப்படும்போது தற்சமனாக்கும் முறை வடிவமைக்கப் படுகின்றது.

தற்சமணக்கும் முறையை விளக்க மூன்று பேரேடுகளை கொண்ட ஒரு நிறுவனத்தை உதாரணமாக எடுத்துக்கொள்ள லாம். அவை கடன்பட்டோர் பேரேடு, கடன்கொடுத்தோர் பேரேடு, பொதுப்பேரேடு என்பன.

## கடன்பட்டோர் பேரேடு

வியாபாரக் கடன்பட்டோரின் தனிநபர்க் கணக்குகள் இப்பேரேட்டில் பேணப்படும். இது விற்பனைப் பேரேடு எனவும் அழைக்கப்படும். இப்பேரேடு ஒரு நிறுவனத்தில் பேணப் படும்போது கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட நபரின் கணக் குகள் பொதுப் பேரேட்டிலிருந்து எடுக்கப்பட்டு இப்பேரேடு தொடக்கப்படும். வியாபாரக் கடன்பட்டோரின் கணக்குகள் மட்டும் இப்பேரேட்டில் திறக்கப்படும்.

படி 1: எல்லா வகைக் கணக்கும் ஒரு பேரேட்டில் தொடங்க படும்போது அது ''பிரதான பேரேடு'' அல்லது பொதுப் எனப்படும்.

படி 2: பொதுப்பேரேட்டில் இருந்து காசு நடவடிக்கை வேறாகப்படும்போது இரு புத்தகங்கள் உண்டு.

(1) பொதுப்பேரேடு (2) நிரல்காசேடு

படி 3: மூலதனக் க/கு, பற்றுக் க/கு, நடைமுறைக் க/கு ஆகி யவை தனியான பேரேட்டில் (''தனிப்பட்ட பேரேட் டில்'') பதியப்படும்போது

(1 பொதுப்பேரேடு (2) 'தனிப்பட்ட பேரேடு' (3) காசேடு

படி 4: கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் கணக்குகளு பொதுப பேரேட்டிலிருந்து வேறாக எடுக்கப்படும்போது

1) பொதுப்பேரேடு (2) தனிப்பட்ட பேரேடு (3) கடன்பட் டோர் பேரேடு (4) கடன் கொடுத்தோர் பேரேடு (5) காசேடு

## கடன் கொடுத்தோர் பேரேடு

இப்பேரேடு வியாபாரக் கடன் கொடுத்தோரின் தனி நபர் கணக்குகள் பேணப் பயன்படுத்தப்படும். இது கொள்வ னவு பேரேடு எனவும் அழைக்கப்படும்.

## பொதுப் பேரேடு

மேற்கூறிய தவிர்ந்தன. ஏனைய ஆள் குறிக்கும், மெய் கணக்குகள், பெயரளவில் கணக்குகள் பொதுப் பேரேட்டில் பேணப்படும்,

| ஆள்குறிக்கும் க/கு | மெய்க்க/கு | பெயரளவில்க/கு |
|---|---|---|
| மூலதனம் | காசு | வாடகை |
| பற்று | நிலம் | சம்பளம் |
| நடைமுறை | கட்டடம் | சுமைக்கூலி |
| வங்கி | பொறி | பணிசை |
| அட்டுறுவட்டி | தளபாடம் | மின்வலு |
| அட்டுறு சம்பளம் | நன்மதிப்பு | கழிவுகள் |
| கடன் | விற்பனை | அறவிடமுடியாக்கடன் |
| | கொள்வனவு | ஐயக்கடன்ஏற்பாடு |
| | உண்டியல் | வட்டி |
| | சரக்கிருப்பு | |
| | திருப்பங்கள் | |

## பரீட்சை நிலுவை தயாரித்தல்

நடவடிக்கைகள் மூன்று பேரேடுகளில் பதியப்பட்ட பின்னர் தயாரிக்கப்படும் பரீட்சை மீதியில் இசைவின்மை ஏற்படின் எந்தப் பேரேட்டிற் வழு உண்டு என இனங்காண்பது கடினம். எனவே ஒவ்வொரு பேரேட்டுக்கும் தனித்தனியாக பரீட்சை நிலுவை தயாரிக்கப்படுவது அவசியமாகும். ஆகவே மூன்று பேரேடுகளுக்கும் மொத்தமாக மூன்று பரீட்சை நிலுவைகள் தயாரிக்கப்படுகின்றது. உதாரணமாக கடன்பட்டோர் பேரேட்டுக்கான பரீட்சை நிலுவை இணங்காது இருக்கும்போது தவறானது கடன்பட்டோர் தொடர்பான கணக்குகளில் ஏற்பட்டு உள்ளது என அறியமுடிவதுடன் ஏனைய கடன்கொடுத்தோர் பேரேடு, பொதுப் பேரேடு என்பதை சரிபார்க்க வேண்டிய தேவையில்லை ஆனால் ஒவ்வொரு பேரேட்டுக்கும் தனியாக பரீட்சைமீதி தயாரிப்பது கடினமானது உதாரணமாக கடன்பட்டோர் பேரேட்டில் கடன்பட்டோர் கணக்குகள் இருக்குமேயன்றி அவற்றுக்கான செலவு மீதிகள் இடம்பெறாது.

எனவே இப்பேரேட்டின் எண்கணித ரீதியான செம்மைத் தன்மையை நிறுவுவதும் பரீட்சைமீதி எடுப்பதும் இயலாது போகின்றது. இவ்வாறே மற்றைய இரு பேரேட்டுக்கும் அமையும்.

## செம்மையாக்கல் கணக்கு

ஒவ்வொரு பேரேட்டுக்கும் தனியான பரீட்சை மீதியைத் தயாரிப்பதற்கு தவறியுள்ள தகவல்கள் ''உதவும் கணக்கினை'' திறப்பதன்மூலம் பெறப்படும். இம் மேலதிகக் கணக்கு தற்சமனாக்கும் கணக்கு கட்டுப்பாட்டுக் கணக்கு' செம்மையாக்கும் கணக்கு, மொத்தக் கணக்கு என்ற பெயர் கொண்டு அழைக்கலாம் மூன்று பேரேடுகளிலும் உள்ள கணக்குகள் பின்வருமாறு அமையும்.

| கடன்பட்டோர் பேரேடு | கடன்கொடுத்தோர் பேரேடு | பொதுப்பேரேடு |
|---|---|---|
| 1 கடன்பட்டோரின் ஆள்குறிக்கும்க/குகள் | 1 கடன் கொடுத்தோர் ஆள்குறித்த கணக்கு | 1 எல்லா பெயரளவுக் க/கு<br>2 எல்லா மெய்க்க/கு<br>3 கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் தவிர ஏனைய ஆள் குறிக்கும் க/குகள் |
| 2 பொதுப் பேரேட்டுச் செம்மைக்கும் க/கு | 2 பொதுப் பேரேட்டு செம்மையாக்கும் க/கு | 4 கடன்பட்டோர் பொதுப்பேரேட்டுச் செம்மையாக்கும் க/கு<br>5 கடன்கொடுத்தோர் செம்மைக்கும்க/கு இக் க/கு தனியாள் பரீட்சைமீதி பெறப்படுவதற்காக |
| இதுகணக்கீட்டுக்கால முடிவில் தனிபயான பரீட்சை மீதியைத் தயாரிப்பதாக திறக்கப்படும் | | |

### தற்சமனக்கப்படும் முறையில் பேணப்படும் பேரேடுகளுக்கு துணையேடுகளிலிருந்து பதிவுகளை மேற்கொளளுதல்

1 விற்பனை நாளேட்டிலிருந்து பதிவுகளை மேற் கொள்ளுதல்

தற்சமனாக்கும் முறையில் பேரேடுகள் பேணப்படும் போது நான்கு பதிவுகள் விற்பனை ஏட்டிலிருந்து மேற்கொள்

ணப்படும் அவற்றில் இரண்டு உண்மையான பதிவுகளாகவும் மற்றவை செம்மையாக்கும் கணக்குபதிவாகவும் அமையும்

வழமையான பதிவுகள்

1 கடன்பட்டோர் பேரேட்டில் தனியான நடவடிக்கை கடன்பட்டோர் க/இல் பதியப்படும்

2 மாதமுடிவில் உள்ளமொத்தம் பொதுப் பேரேட்டில் உள்ள விற்பனைக் க/இல் பதியப்படும்

தற்சமனாக்கும்பதிவு

விற்பனைப் ஏட்டில் மாதமுடிவில் உள்ள மொத்தத் தொகை கடன்பட்டோர் பேரேட்டில் வரும் பொதுப் பேரேட்டுச் செம்மையாக்கும் கணக்கில் செலவுப்பகத்திக்ல் பதியப்படும்.

3 விற்பனை ஏட்டில் உள்ள மாத மொத்தம் பொதுப் பேரேட்டில் விற்பனைப் பேரேடுகள் க்/இல் பதியப்படும்

செம்மையாக்கும் கணக்கில் வரவுப்பகுதியாக இடம்பெறும் செம்மையக்கல் க/இல் புத்தகத்தின் மொத்தத் தொகை பதியப்படுவதுடன் வழமையான பதிவுக்கு எதிரானதாக அமையும் உ+ம் X ரூபா 500 Y க்கு ரூபா 2,000 Zக்கு ரூபா 5,500க்கும் கடன்னுக்கு.

இந்நடவடிக்கையில் தற்சமையம் முறையோ பேணப்படும் பேரேபதிக.

1 வழமையனபதிவு

| | | |
|---|---|---|
| X | (வ) | 500 |
| Y | (வ) | 2000 |
| Z | (வ) | 5500 |

விற்பனைக்கு 8,000

2 தற்சமனகும் பதிவு

கடன்பட்டேர் செம்மையாக்கல் கணக்கு (பொதுப்பேரேடு) 8,000

பொதுப் பேரேட்டுச் செம்மையாக்கல் க/கு (கடன்பேரேடு) 8000

விளக்கம் 1 பின்வரும் நடவடிக்கைகளுக்கான தற்சமனாகும் பதிவுகளையும் செம்மையாக்கும் கணக்குகளையும் தருக. 92ம் ஆண்டு ஜனவரி

| | | |
|---|---|---|
| 1 | இம்மாதத்தில் கடனுக்கு விற்பனை | ரூ 5750 |
| 2 | கடன்பட்டோரிடமிருந்து பெற்றகாசு | ரூ 1500 |
| 3 | பெற்றவருமதி உண்டியல் | ரூ 800 |
| 4 | இம்மாதத்திற்குரிய திருப்பம் | ரூ 30 |
| 5 | இம்மாதத்தில் கொடுத்த கழிவு | ரூ 35 |
| 6 | அறவிடமுடியாக்கடன் | ரூ 50 |

7 50 ரூபா பெறுமதியான வருமதியுண்டியல் கடன்பட்டோரினால் மறுக்கப்பட்டது. நாட்குறிப்புப்பதிவுகளைத் தருக?

நாட்குறிப்பும் பதிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | கடன்பட்டோர் கணக்கு | வரவு ......... | |
| | விற்பனைக் கணக்கு | | ......... |
| 2 | காசுக் கணக்கு | வரவு ......... | |
| | கடன்பட்டோர் கணக்கு | | ......... |
| 3 | வருமதியாளர் கணக்கு | வரவு ......... | |
| | கடன்பட்டோர் கணக்கு | | ......... |
| 4 | உட்திரும்பல் கணக்கு | வரவு ......... | |
| | கடன்பட்டோர் கணக்கு | | ......... |
| 5 | கொடுத்த கழிவு | வரவு ......... | |
| | கடன்பட்டோர் கணக்கு | | ......... |
| 6 | அறவிடமுடியாக்கடன் கணக்கு | வரவு ......... | |
| | கடன்பட்டோர் கணக்கு | | ......... |
| 7 | கடன்பட்டோர் கணக்கு | வரவு ......... | |
| | வருமதி உண்டியல் | | ......... |

தற்சமனாக்கும் பதிவுகள்

| | | | |
|---|---|---|---|
| கடன் பட்டோர்பேரேட்டு செம்மையாக்கும் கணக்குவரவு | | | ......... |
| | பொதுப் பேரேட்டு செம்மையாக்கும் கணக்கு | | ......... |
| பொதுப் பேரேட்டு செம்மையாக்கும் கணக்கு | | வரவு | ......... |
| கடன்பட்டோர் பேரேட்டு செம்மையாக்கும் கணக்கு | | | ......... |

பொதுப் பேரேட்டு செம்மையாக்கும் கணக்கு வரவு .........
கடன்பட்டோர் பேரேட்டு செம்மையாக்கும் கணக்கு .........
பொதுப் பேரேட்டு செம்மையாக்கும் கணக்கு வரவு .........
கடன்பட்டோர் பேரேட்டு செம்மையாக்கும் கணக்கு .........
பொது பேரேட்டு செம்மையாக்கும் கணக்குவரவு .........
கடன்பட்டோர்பேரேட்டு செம்மையாக்கும் கணக்கு .........
பொது பேரட்டு செம்மையாக்கும் கணக்கு வரவு .........
கடன்பட்டோர் பேரேட்டு செம்மையாக்கும் கணக்கு .........
கடன்பட்டோர்பேரேட்டு செம்மையாக்கும் கணக்கு வரவு.........
பொதுப் பேரேட்டு செம்மையாக்கும் கணக்கு .........

## கடன்பட்டோர் பேரேடு

### பொதுப்பேரேட்டுச் செம்மையாக்கல் கணக்கு

(மாத முடிவில் மொத்தங்கள்)

| | | | |
|---|---|---|---|
| கடன்பட்டோர் செம்மைக/கு | | கூலி செம்மை க/கு | |
| காசு | 1500 | விற்பனை | 5750 |
| வருமதி உண்டியல் | 800 | மறுக்கப்பட்ட உண்டியல் | 50 |
| உட்திருப்பம் | 30 | | |
| கழிவு | 35 | | |
| அறவிடமுடியாக்கடன் | 50 | | |
| மீதி/கி/கொ/சென் | 3385 | | |
| | 5800 | | 5800 |

## பொதுப் பேரேடு

### கடன்பட்டோர் பேரேட்டுச் செம்மையாக்கும் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| பொதுப்பேரேட்டு செம்மைக/கு | | பொது செம்மை க கு | |
| விற்பனை | 5750 | காசு | 1500 |
| மறுக்கப்பட்ட உண்டியல் | 50 | வருமதி உண்டியல் | 800 |
| | | உட்திருப்பம் | 30 |
| | | கழிவு | 35 |
| | | அறவிடமுடியாக்கடன் | 50 |
| | | மீதி.கி.கொ.சென் | 3385 |
| | 5800 | | 5800 |

## ஒரு பேரேட்டிலிருந்து மற்றைய பேரேட்டுக்கு நடை பெறும் மாற்றங்கள்

சில சமயங்களில் கடனுக்கு விற்பனை செய்த நபரிட மிருந்து கடனுக்குக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற் படின் அந்நபரின் பேரேட்டுக் கணக்கு உள்ள ஏட்டிற்கு (கடன பட்டோர் பேரேடு, கடன்கொடுத்தோர் பேரேடு) மாற்றல் செய்ய வேண்டும். உ+ம் X ற்கு விற்பனை 300 ரூபா இது கடன்பட்டோர் பேரேட்டில் வரவு வைக்கப்படும். X இடமிருந்து கொள்வனவு 200 ரூபா கடன் கொடுத்தோர் பேரேட்டில செலவு வைக்கப்படும்' X இன் கணக்கு கடன்பட்டோர் பேரேட் டிலிருக்குமாயின் 200 ரூபா கடன்கொடுத்தோர் பேரேட்டில் இருந்துமாற்ற வேண்டும்.

| | |
|---|---|
| X க/கு (கடன் கொடுத்தோர் பேரேடு வரவு) | 200 |
| X க/கு (கடன் பட்டோர் பேரேடு) | 200 |

தற்சமனாக்கும் பதிவு

1 கடன் கொடுத்தோர் செம்மையாக்கும் க/கு பொதுப் பேரேடு வரவு 200

பொதுப்பேரேடு செம்மையாக்கும் க/கு (கடன் கொ.பேரேடு 200

2 பொதுப்பேரேடு செம்மையாக்கும் க/கு (கடன்பட்டோர் பேரேடு) வரவு 200

கடன்பட்டோர் பேரேடு செம்மையாக்கும் க/கு பொ.பேரேடு 200

பின்வரும் தகவல்கள் 1992 ஜனவரி மாதத்திற்கு உரி யதாகும். இவற்றை புத்தகங்களில் பதிந்து தற்சமனாக்குமுறை யில் உள்ள கடன்பட்டோர் பேரேட்டில் பதிந்து பரீட்சை மீதி யைத் தயார் செய்க.

| | விற்பனை | பெற்ற காசு | கொடுத்த கழிவு | வருமதி உண்டியல் | திரும்பிய சாக்கு |
|---|---|---|---|---|---|
| A | 2860 | 1980 | 20 | 300 | - |
| B | 1570 | 990 | 10 | 200 | - |
| C | 5450 | 3960 | 40 | 1000 | 50 |
| D | 3100 | 2970 | — | — | 100 |

| காசேடு பெறுகைப்பக்கம் | கழிவு | காசு | உட் திருப்பம் | | வருமதி உண்டியல் | | விற்பனை நாளேடு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 20 | 1980 | C | 50 | A | 300 | A | 2860 |
| B | 10 | 990 | D | 100 | B | 200 | B | 1570 |
| C | 40 | 3960 | | | C | 1000 | C | 5450 |
| D | — | 2970 | | | | | D | 3100 |
| | 70 | 9900 | | 150 | | 1500 | | 12980 |

## கடன்பட்டோர் பேரேட்டுப் பதிவு

'A' க/கு

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 2860 | வ. உஷச | 300 |
| | | காசு | 1980 |
| | | கழிவு | 20 |
| | | மீதி | 560 |
| | 2860 | | 2860 |

B க/கு

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 1570 | காசு | 190 |
| | | கழிவு | 10 |
| | | வ. உண்டிய | 200 |
| | | மீதி | 370 |
| | 1570 | | 1570 |

C க/கு

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 5450 | காசு | 3960 |
| | | கழிவு | 40 |
| | | உட்திருப்பம் | 50 |
| | | வ. உண்டிய | 1000 |
| | | மீதி | 400 |
| | 5450 | | 5450 |

D க/கு

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | 3100 | காசு | 2970 |
| | | திருப்பம் | 100 |
| | | மீதி | 30 |
| | 3100 | | 310 0 |

## பொதுப்பேரேட்டுச் செம்மையாக்கல் க/கு

| | | | |
|---|---|---|---|
| கடன்பட்டோர் செம்மை க/கு | | விற்பனை (5) | 12980 |
| காசு (2) | 9900 | | |
| கழிவு (1) | 70 | | |
| உட்திருப்பம் (3) | 150 | | |
| வருமதி உண்டியல் (4) | 1500 | | |
| மீதி | 1360 | | |
| | 12980 | | 12980 |

## பரீட்சை மீதி

| | வரவு | செலவு |
|---|---|---|
| A | 560 | |
| B | 370 | |
| C | 400 | |
| D | 30 | |
| பொதுப் பேரேட்டுச் செம்மை க/கு | | 1360 |
| | 1360 | 1360 |

# பொதுத்துறை நிறுவனங்களின் தனியார் மயப்படுத்தல்

யாழ் வலயம் 2 இல் க. பொ. த உயர்தர வணிகப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை.

செல்வன் சீ- முகுந்தன்

ஆண்டு 13 வர்த்தகம்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி

வல்வெட்டித்துறை

மாக்ஸிச லெனினிசக் கருத்துக்களினால் புரையோடிய சோவியத்ரஷ்யா, கிழக்கைரோப்பா போன்ற நாடுகளில்கூட அலைவீசிக்கொண்டிருக்கும் இத்தனியார் மயப்படுத்தல் என்னும் அலைக்குள் இலங்கையும் சிக்கியுள்ளது. இலங்கையின் பொதுத்துறை நிறுவனங்களில் காணப்பட்ட மிகை ஊழியர் பிரச்சினை நட்டத்தில் இயங்குகின்ற தன்மை போன்ற பல்வேறு காரணங்களுக்காக அரச நிறுவனங்களை மூடிவிடவேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டது. அதுமட்டுமன்றி பாதுகாப்பு செலவினங்களின் உயர்வினால் வங்குரோத்து நிலையினை எட்டி ஆழம் காணமுடியாத நிலையிலுள்ள இலங்கைத் திறைசேரியும் அரச நிறுவனங்களுக்கு வரவு செலவுத் திட்டத்தினூடாக வழங்கிய மானியத்தினாலும் ஆட்டம் கண்டது. திறைசேரிக்கு இப்பழுவை நீக்குவதற்காகவே ஐக்கிய தேசிய கட்சி 1985ம் ஆண்டளவில் கொள்கை அளவிலே இத் தனியார் மயப்படுத்தலை ஏற்றுக் கொண்டது.

தனியார் மயப்படுத்தல் என்பதுபற்றி நாம் நோக்குகையில் அரச சம்பந்தமான ஒன்றை தனியாரிடம் கையளித்தல் OR விட்டுக் கொடுத்தலே தனியார் மயப்படுத்தல் எனலாம். அதாவது அரச நிறுவனங்களின் உரிமையினைத் தனியாரிடம் கையளித்ததற்கு உதாரணமாக பூகொட டெக்ஸ் ரைல் இந்தியாவின் இலக்குமி மில்லிடம் கையளிக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். இவைகள்மூலம் திறைசேரியின் நிதிப்பிரச்சனையை ஒரளவிற்கு செப்பனிட முயன்றனர் ஐக்கிய தேசிய கட்சியினர்.

இதுமட்டுமன்றி அரச நிறுவனங்களின் முகாமையினையும் தனியாரிடம் ஒப்படைத்தமைக்கு எடுத்துக்காட்டாக அரச

பெருந்தோட்டங்கள் 44922 தனியார் கம்பனிகளிடம் முகாமையினை ஒப்படைத்தமையைக் குறிப்பிடலாம். இதனால் தனியாரின் நிர்வாக, தொழில் நுட்பத்திறமையினால் இலாபநோக்கும் வலியுறுத்தப்பட அரச நிறுவனங்களுக்கு மானியம் வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படமாட்டாது. இதுவும் அரசாங்கத்திற்கு நன்மை பயக்குமென அடித்துக் கூறினர் ஐக்கிய தேசிய கட்சியினர்

இது இவ்வாறிருக்க தனியார் மயப்படுத்தலின் மூலம் அரச சொத்துகள் ஒரு சில தனியாரிடம் ஒப்படைக்கப்படுகின்றது எனவும், இதனால் வறிய மக்களின் தேவைகளை பூர்த்தியாக்க முடியாது எனவும் சமூகநலன்புரி சேவைகள் புறக்கணிக்கப்படுகின்றது. எனவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் மேடைகள் தோறும் காரசாரமாக முழங்கித் தள்ளினர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் இப் போக்கானது ஐக்கிய தேசியக்கட்சியினருக்கு பெரும் சவாலாக அமைந்தது இதனால் ஐக்கிய தேசிய கட்சியினரின் பொருளியலாளர் குழாம் தாம் கூட்டிய வட்டமேசை மாநாட்டின் பிரகாரம் ஆங்கில அகராதியிலுமே காணப்பட முடியாத மக்கள் மயப்படுத்தல் எனும் சொற் பிரயோகத்தினமூலம் மீண்டும் தமது கொள்கையை கோடிட்டு காட்ட முயன்றனர் ஐக்கிய தேசிய கட்சியினர்.

ஆனாலும் தனியார் மயப்படுத்துதலினின்றும் மக்கள் மயப்படுத்தலானது சற்று வேறுபடத்தான் செய்கிறது. அதாவது தனியார் மயப்படுத்தலில் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட பெரும்பான்மையான பங்குகள் மக்கள் மயப்படுத்தல் மூலம் குறைக்கப்பட்டன. மக்கள் மயப்படுத்தலானது அரச நிறுவனங்களில் பங்குகளில் 10 வீதமான பங்குகளை அரச நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியருக்கு இலவசமாகவும், 30 வீதமான பங்குகள் பொதுமக்களுக்கும் மீதமான 60வீத பங்குகள் வெளிநாட்டு உள்நாட்டு தனியார் நிறுவனங்களிடமும் ஒப்படைக்கப்படுகின்றது. இதன் மூலம் அரச நிறுவனங்களில் வேலைசெய்த ஊழியரின் அக்கறையினை அதிகரித்தும் உரிமையினை அளித்தும் வெளிநாட்டிலிருந்து முதலீடு, தொழில்நுட்ப நிர்வாக திறமைகளை வரவழைப்பதற்கும் ஐக்கிய தேசிய கட்சியினர் முனைந்தனர்

இதனால் அரசின் திறைசேரிக்கு நிதிப் பிரச்சனை தவிர்க்கப்படுவதுடன் வெளிநாடுகளில பிச்சைக்கிண்ணம் ஏந்துவதை குறைப்பதற்கும் மானியங்களாக வழங்கப்பட்ட நிதியினை வேறு பிற முதலீட்டு திட்டங்களிற்கும பயன்படுத்துவதற்கும் கம்பனி மக்கள் மயப்படுத்தல் எனும் கருவியானது பெரிதும் உதவி புரியும்.

மக்கள் மயப்படுத்தல் மூலம் அரசு பல நன்மைகளை அனுபவிக்கத் தொடங்கும். அதாவது நிதிப்பிரச்சனை தவிர்க்கப்படுவதுடன் நிறுவனங்களில் இலாப நோக்கம் வலியுறுத்தப் பட்டமையினால் அரசிற்கு வருமானம் கிடைத்தது. இதன் மூலம் பிற முதலீட்டு திட்டங்களை விரிவுபடுத்தி மக்களுக்கு சமூக நலன்புரிச் சேவைகள் அதிகரித்து, முதலாளி தொழிலாளி எனும் வர்க்க வேறுபாடுகள் பெரிதும் நீக்கப்படும்.

அரசு அவ்வாறு நன்மைகள் அனுபவித்தாலும் சில தீமைகளும் இம்மக்கள் மயப்படுத்தலில் உள்ளன. அதாவது அரசின் சொத்துக்கள் பல தனியாரிடம் விடப்பட்டன. அத்துடன் இல்லாமல் வெளிநாட்டு கலாச்சார தாக்கங்களும் ஏற்படத்தொடங்கின. இலாபங்கள் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இவ்வாறு சில தீமைகள் காணப்பட்டாலு- ஐக்கிய தேசியக் கட்சி தமது கொள்கைகளை மக்கள் மயப்படுத்தல் மூலம் வலியுறுத்த முயன்றனர்.

அண்மையிலே ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்கா அவர்களினால் மக்கள் மயப்படுத்தல் விவகார அமைச்சு என்ற ஒன்று உருவாக்கியதிலிருந்து இதன் சிறப்பை ஐக்கிய தேசிய கட்சியினர் இமயம் வரை உயர்த்திவிட்டனர் என்பதில் எவ்வித மறுப்பும் இல்லை.

எனவே இன்று கியூபா, வடகொரியா போன்ற ஒரு சில நாடுகள் தவிர ஏயனை பல சோசலிச நாடுகள் சந்தை முறையைத் தாபிக்கும் பல கட்டங்களை நெருங்குகின்ற பொழுது இலங்கையும் இத்தனியார் மயப்படுத்தலை முன்னெடுத்துச் செல்வதில் எவ்வித தப்பும் இல்லை என்றே கூறலாம

# இலங்கையில் வங்கி தொழிலின் வளர்ச்சிப் போக்கு

யாழ் வலயம் 2ல், க.பொ.த உயர்தர வணிகப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற கட்டுரை

செல்வி ந தர்சினி
யா/ சிதம்பராக் கல்லூரி

நவீன வர்த்தக உலகில் தனிநபர், வியாபார நிறுவனங்கள், பொதுவான நிறுவன அமைப்புகள் அனைத்தும் பணத்தினைப் பயன்படுத்துதல் அவசியமாகும். பணம் தொடர்பான நிறுவனங்களில் முதலிடம் வகிப்பது வங்கியாகும். பணத்தினையும்; வைப்புக்களை வழங்குதல் தொடர்பான நடவடிக்கையினையும் கையாளுகின்ற நிறுவனங்கள் வங்கிகள் என வரையறுக்கலாம்.

ஆரம்ப காலங்களில் வங்கிகளானவை வைப்பினை ஏற்றல் பணம் வழங்குதல பொருட்கள் சேவைகளைப் பாதுகாத்தல், ஆகிய குறுகிய செயற்பாட்டிலேயே இயங்கி வந்துள்ளன. இச் செயற்பாட்டினை மேற்கொண்ட வகை வங்கிகளிற்கு உதாரணமாக 1938இல ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கியினை குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

ஆனால் பிற்பட்ட காலத்தில் வியாபாரமும் அதன் அபிவிருத்திக் கட்டமான வர்த்தகமும் வளர்ச்சியடைய வங்கி தொழிலில் அரசு மாத்திரமன்றி தனியாரும் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டது. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தனியார் வங்கி ஹிற்றீல்‌ஸென்ட்ஸ் வங்கி ஆகும். இது 1981 இல் ஆரம்பிக்கப்பட்டது. இத்தனியார் வங்கிகளானவை அரச வங்கிகள் ஆற்றும் பொதுவான செயற்பாடுகளை ஆற்றியதோடு மேலும் பல சலுகைகளையும் மக்களிற்கு வழங்கி வந்துள்ளன. சலுகைகள் எனும்போது முதலீட்டாளனிற்கான சந்தைவாய்ப்புகளை பெற்றுக கொடுத்தல்; வாடகை கொள்வனவு, விற்பனை முறையினைச் செயற்படுத்தல் அரசு வழங்கிவரும் வட்டியிலும் பார்க்க கூடுதலான வட்டி வீதத்தினை சேமிப்பு வைப்புகளிற்கு வழங்கல் போன்ற தொழிற்பாடுகளை உள்ளடக்குகிறது. எனவே

இலங்கையில அரசு மட்டுமன்றி தனியாரும் வங்கித் தொழிலில் ஈடுபட்டமை வங்கித் தொழிலின் வளர்ச்சிப் போக்கினையே காட்டி நிற்கின்றது.

இலங்கையில் வங்கி தொழிலின் வளர்ச்சிப் போக்கானது இலங்கையில் வங்கி தொழிலில் ஈடுபட்டுவரும் வங்கிகளின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. இலங்கையில் வங்கி தொழிற்பாட்டில் ஈடுபடும் அமைப்புக்கள் இலங்கை வணிக வங்கி, மத்தியவங்கி, சேமிப்பு வங்கி, இராமிய வங்கி, அபிவிருத்தி வங்கி, வியாபார வங்கி போன்றவையாகும்.

இலங்கையில் 1938 ஆம் ஆண்டிலேயே முதலாவது வணிக வங்கியாக இலங்கை வங்கி உருவாக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து பிற்பட்ட காலங்களில் மேலும் பல புதிய வங்கிகள் உருவாக்கப்பட்டு இன்று இலங்கையில் 23 வணிக வங்கிகள் தொழிற்பட்டு வருகின்றன. இதில் 6 உள்ளூர் வங்கிகளாகவும் அதிலும் 2 அரசினுடைய வங்கியாகவும் தொழிற்பட்டு வருகின்றது. ஏனைய 17 வங்கிகளும வெளிநாட்டிற்குச் சொந்தமான வணிக வங்கிகளாகும். இன்று வணிக வங்கிகளின் எண்ணிக்கை அதிகரித்தமையானது இலங்கையில் வங்கி தொழிலின் வளர்ச்சிப் போக்கினையே எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. வங்கிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வங்கியினது தொழிற்பாடுகளும் அதிகரிக்கும் போக்கானது நடைமுறையில் காணப்படுகின்றது.

1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து இலங்கையில் புதிய பண வெளியீடு அவசியமானதாக காணப்பட இலங்கையில் நாணய வெளியீட்டை மேற்கொள்ளும் நோக்குடன் 1950 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி இலங்கை மத்திய வங்கியானது இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் ஒரேயொரு மத்திய வங்கியே தொழிற்பட்டு வருகின்றது. இம்மத்திய வங்கியானது நாணய வெளியீட்டில் தனியுரிமை வகிக்கின்றது. மத்திய வங்கியின் செயற்பாடானது அதிகரித்தமை காரணமாக இம் மத்திய வங்கியானது மாத்தளை, அனுராதபுரம், மன்னார் ஆகிய பிரதேசங்களில் கிளைகளை அமைத்து தொழிற்பட்டு வருகின்றது. இம்மத்திய வங்கியானது அண்மையில் 1990, 1991ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் கட்டுநாயக்கா விமான நிலையப் பகுதிகளில்தங்க விற்பனை நிலையங்களை புதிதாக உருவாக்கியுள்ளது இச் செயற்பாடுகூட இலங்கை வங்கித் தொழிலின் வளர்ச்சிப் போக்கினையே எடுத்தியம்புப காரணியாக அமைகிறது.

1972ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய சேமிப்புவங்கியானது உருவாக்கப்பட்டது. இது 1971இல் இலங்கை சேமிப்பு வங்கி, அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி ஆகிய மூன்றும் ஒருங்கிணைக்கப்பட்டதன் விளைவாக உருவாக்கப்பட்டது.

கிராமிய மக்களின் வங்கிப் புழக்கத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் இலங்கையில் கிராமிய வங்கிகளானவை ஆரம்பிக்கப்பட்டன. இதன் காரணத்தால் கிராமிய மக்களின் வங்கிப் புழக்கம் அதிகரிக்க அது இலங்கையில் வங்கி தொழிலாற்றும் அமைப்புகளில் ஒன்றான கிராமிய வங்கியின் செயற்பாடு அதிகரிக்கப்பட வங்கி தொழிலின் வளர்ச்சிக்கும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

நாட்டின் அபிவிருத்தி நோக்கம் கருதி உருவாக்கப்பட்ட அபிவிருத்தி வங்கிகளானவை மக்களுக்கு நீண்டகால குறுங்கால கடன் வசதிகளை வழங்கி நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்த முனைகின்றன. உதாரணம இலங்கை கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஆனால் ஆரபப காலங்களில் இக்கடன் வழங்கும வசதிகளானவை காணப்படவில்லை. இன்று இககடன் வழங்கும் வசதிகளை அபிவிருத்தி வங்கிகளானவை மேற்கொள்கின்றன என்றால் அது வு கூட இலங்கையில் வங்கித் தொழில் துரிதமாக வளர்ச்சி அடைந்தமையே காட்டுகின்றன.

இலங்கையில் 1982ஆம் ஆண்டில இலங்கை வரையறுத்த வியாபார வங்கியானது ஆரமபிக்கப்பட்டது. இது வர்த்தகர்களிற்குத் தேவையான சிறந்த ஆலோசனைகளை வழங்கி வருவதுடன ஒப்புறுதி அளிக்கும செயற்பாட்டிலும் ஈடுபட்டு வருகின்றது. முன்னர் குறுகிய தொழிற்பாட்டில் ஈடுபட்டுவந்த வங்கிகளானவை இன்று இவ்வளவு தூரம முன்னேற்றப் பாதையில் அடிஎடுத்து நகர்ந்து வருகின்ற செயற்பாடானது இலங்கையின் வங்கி தொழிலின் வளர்சசிப் போக்கினையே எடுத்தியம்புகிறது.

இலங்கையில் வங்கிகளின் எண்ணிக்கைகள் அதிகரித்ததை விடவும் அவற்றினால் அறிமுகப்படுத்தப்படுகின்ற சிலபல திட்டங்களும் இன்று வங்கி தொழிலின வளர்ச்சிப்போககு அதிகரித்து வருவதனையே காட்டுகின்றது. உதாரணமாக மகளிர் பொற்கணக்கு, முறையினைக் கூறிக்கொள்ளலாம

இலங்கை வங்கியானது தனது 55 ஆவது ஆண்டு விழாவின்போது மகளிர் சிக்கனத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் இதனை அறிமுகப்படுத்தி உள்ளது

மற்றும் இன்று வங்கியமைப்புகளில் காணப்படும் தன்னியக்கப் பொறிமுறையான ரெலர் இயந்திர அறிமுகம் கூட இலங்கையில் வங்கி தொழில் வளர்ச்சியடைகின்றமைக்கு ஒரு காரணமாகும்.

வங்கிகளின் செயற்பாட்டை இலகுபடுத்தும் நோக்குடன் கணனி மயப்படுத்தப்பட்ட இத்தன்னியக்கப் பொறிமுறையானது வங்கி தொழிலை இன்று இலகுபடுத்தி உள்ளது. இதனால் முன்னர் மனிதசக்தி மூலம் செயற்படுத்தப்பட்ட வேலைகளானவை இயந்திரமூலம் இலகுபடுத்தப்பட்டன.

தொகுத்து கூறின் இலங்கை வங்கிகளின் வளர்ச்சிப் போக்கை ஆராய்கையில் இலங்கையில் வங்கிப் புழக்கங்கள் தற்காலத்தில் அதிகரிக்கப்பட்டு வங்கி தொழிலும துரிதமாக வளர்ச்சியடைந்து வருவதனை நாம் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று உணர்ந்து கொள்ளலாம்.

# யாழ் மாவட்ட வணிக வள நிலையம்

கல்வித் திணைக் களம்
யாழ்வலயம் 1
யாழ்ப்பாணம்.

**காப்பாளர்:-**

செல்வி தி. பெரியதம்பி
கல்விப்பணிப்பாளர் யாழ் வலயம் 1

திரு. க. கந்தசாமி
கல்விப் பணிப்பாளர் யாழ் வலயம் 2

**சஞ்சிகை முகாமைக்குழு:-**

| | |
|---|---|
| திரு நா. வரதராசா | உதவிக் கல்விப் பணிப்பாளர் |
| திரு வ. க. பாலசுப்பிரமணியம் | சிறப்பு அலுவலர் |
| திரு க. கதிரமலை | ஆசிரிய ஆலோசகர் |
| செல்வி நா. வேலுப்பிள்ளை | ,, ,, |
| திரு ப. சுந்தரலிங்கம் | ,, ,, |
| திரு சு. கணேசு | ,, ,, |
| திரு தா. பாலசுந்தரம் | ,, ,, |
| திருமதி த. சத்தியதாசன் | ,, ,, |

வளம்' தொடர்பான கட்டுரைகள் விமர்சனங்கள் அனுப்பவேண்டிய முகவரி

நா வரதராசா
திட்டமிடல் அலுவலர்
கல்வித்திணைக்களம்
யாழ்வலயம் 2
கோப்பாய்

வ. க. பாலசுப்பிரமணியம்
சிறப்பு அலுவலர்
கல்வித்திணைக்களம்
யாழ்வலயம் 1
யாழ்ப்பாணம்

அபிராம் அச்சகம் — புலோலி